Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | தை -18 | 01-02-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை-348




## அரசியல் துறைப்பொறுப்பாளர் தலைமையிலான குழு நோபல் சமாதானக்குழுத் தலைவருடன் சந்திப்பு

(ஒஸ்லோ)

ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமையிலான குழுவினர் நேற்று நோபல் சமாதானக்குழுத் தலைவரைச் சந்தித்துள்ளனர்.

அவர்களின் ஐரோப்பிய விஜயத்தின் இரண்டாவது கட்டமாக நடைபெற்ற இச் சந்திப்பில் நோபல் சமாதானக் குழுத் தலைவரும் ரொம்சோ பல்கலைக்கழகப் பேராசிரியருமான பேராசிரியர் ஒலி.டி.எம் ஜோசெயைச் சந்தித்தனர்.

மாலை அரசியல்துறைப் பொறுப்பாளர் அவர்கள் நோர்வே மீன்பிடி விஞ்ஞானக் கல்லூரி பேராசிரியர்கள், விரிவுரையாளர்களைச் சந்தித்தனர். இதன் போது தென்பகுதி அரசியல் பிரச்சினைகள் தொடர்பாகவும் வடக்கு கிழக்கிலுள்ள கடற்றொழிலாளர்கள் சந்திக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் விரிவாக விளக்கிக் கூறினார்.

1993இல் யாழ். பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக இருந்த காலஞ்சென்ற கலாநிதி துரைராஜா அவர்கள் தமது மீன்பிடி விஞ்ஞானக் கல்லூரியுடன் இணைப்புத்திட்டமொன்றைக் கொண்டிருந்ததை கல்லூரியின் இயக்குனர் நினைவு கூர்ந்தார். சமாதான நடவடிக்கைகள் தாமதமின்றி முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதில் தாம் அனைவரும் ஆர்வமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.



### வீரவணக்கம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 29ஆம் திகதியன்று சுகயீனம் காரணமாக போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

கப்டன் நிலாந்தினி /செல்வி (கந்தையா றஞ்சினி, கிண்ணியா மட்டக்களப்பு, த.மு. திம்பிலாகல் சொருவில் மட்டக்களப்பு) என்ற போராளியே சாவடைந்தவராவார்.இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## சனாதிபதி -பிரதமருக்கிடையே எவ்வித உடன்பாடும் எட்டப்படாது

### சனாதிபதியின் ஆலோசகர் கதிர்காமர்

(கொழும்பு)

**சிறிலங்கா சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் எவ்வித உடன்பாடும் எட்டப்படப்போவதில்லை என சனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார். ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில;

இரண்டு தரப்பு பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றங்கள் ஏற்படவில்லை என்ற அறிவிப்பு இன்னும் சில நாட்களில் வெளியிடப்படும் எனக் கூறிய அவர், கடந்த வியாழக்கிழமை வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் இணக்கம் ஏற்பட வாய்ப்பு இருப்பதாக தெரிவித்திருந்த கருத்தையும் லக்ஷ்மன் கதிர்காமர் சுட்டிக்காட்டினார்.

சனாதிபதி பாதுகாப்பு விடயம் தொடர்பாக முன்வைத்த யோசனைகளை பிரதமர் நிராகரித்துள்ளார். தேசிய பாதுகாப்பு போன்ற விடயத்தை முன் கொணர்வதற்கு சனாதிபதி

(8ஆம் பக்கம் பார்க்க...)

## ஜப்பானிய உயர்மட்டக்குழு கிளி. மருத்துவமனைக்கு வருகை

(அலுவலக செய்தியாளர்)

பொருளாதார ஒத்துழைப்புத் தொடர்பான ஜப்பானிய உயர்மட்டத் தூதுக்குழுவினர் நேற்று கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையைப் பார்வையிட்டனர்.

நேற்று நண்பகல் 12 மணிக்கு கிளி.மாவட்ட வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்ட மேற்படி ஜப்பானிய குழுவினரை கிளி.மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி

(8ஆம் பக்கம் பார்க்க...)

## ஜே.வி.பி–சு.க.கூட்டின் எதிர்காலம் குறித்து சந்திரிகா, மகிந்த, அனுரா ஆராய்வு

ஜே.வி.பி-சு.க.கூட்டின் எதிர்காலத் திட்டம் குறித்து சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவும் சனாதிபதியின் ஆலோசகர் அனுராபண்டார நாயக்கவும் சந்தித்து உரையாடியுள்ளனர். நேற்று முன்தினம் சனாதிபதி மாளிகையில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இருமணி நேரத்

(8ஆம் பக்கம் பார்க்க...)

## சனாதிபதி-பிரதமர் பிணக்கிற்கு ஓரிரு தினங்களில் தீர்வு எட்டவேண்டும்

### -மனோதித்தவெல பி.பி.சிக்கு தெரிவிப்பு

சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையேயான பிரச்சினைக்கு ஓரிரு தினங்களில் தீர்வு எட்டப்பட வேண்டும். வெறுமனே பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என மனோதித்தவெல கூறியுள்ளார்.

சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையேயான நெருக்கடியை தீர்க்க நியமிக்கப்பட்ட குழுவில் சனாதிபதி சார்பில் பங்கு பற்றிய அவர் பி.பி.சிக்கு நேற்று பேட்டிஅளித்தார்.

சனாதிபதி பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்ற நாள் முதல் சனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையே பாதுகாப்பு அமைச்சு தொடர்பான பிரச்சினை நீடித்து வருகின்றது. இது எப்போது முடிவுக்கு வருமென்று கேள்விக்குறியாக உள்ளது.

இந்நிலை எப்போது மாறுமென சனாதிபதியின் குழுத்தலைவர் மனோ தித்தவெல விடம் வினவிய போது சனாதிபதியின் நிலைப்பாடு பாதுகாப்பு அமைச்சு தன்னிடையே இருக்க வேண்டும் என்பதே அரசியல் சட்டமும் அவ்வாறே சொல்கிறது என்றார்.

(8ஆம் பக்கம் பார்க்க...)

## முல்லை. நுண்கலைக்கல்லூரியின் 5–ஆம் ஆண்டு நிறைவு விழா

(அலுவலக செய்தியாளர்)

முல்லை. மாவட்ட நுண்கலைக் கல்லூரியின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி அரங்க மண்டபத்தில் நேற்று ஆரம்பமாகியது.

முல்லை மாவட்டத்தில் கலைத்திறனை வளர்த்தெடுக்கும் முகமாக 1999ஆம் ஆண்டு ஆரம்பரிக்கப்பட்ட நுண்கலைக் கல்லூரி நேற்றுடன் தனது ஐந்தாவது வயதை பூர்த்திசெய்கிறது.

(8ஆம் பக்கம் பார்க்க...)



## மக்கள் குழு அமைக்கப்படும்

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதற்காக பிரதமர் மக்கள் குழுக்களின் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார். இதனடிப்படையில் பிரதேசசபை, பிரதேச செயலர் பிரிவு மற்றும் மாகாண சபைகளின் ஊடாக மக்கள்

(8ஆம் பக்கம் பார்க்க...)

## தென்மராட்சியில் திட்டமிட்டபடி சாகும்வரை உண்ணாவிரதம்

தென்மராட்சியின் தனங்கிளப்பு, மறவன்புலோ மற்றும் கைதடி-நாவற்குழி பகுதிகளில் மீளக்குடியமர அனுமதிக்கக்கோரி சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் முன்னர் அறிவிக்கப்பட்டவாறு எதிர்வரும் 4ம் திகதி முதல் இடம்பெறவுள்ளது. ஆனாலும் 4ம் திகதியினுள் படைத்தரப்பு இவ்விடயம் தொடர்பாக சாதகமான எந்தவொரு சமிக்ஞையினையும் வெளியிட முன்வருமாயின், தமது நிலைப்பாட்டிலும் விட்டுக் கொடுப்புக்களை செய்வது பற்றி ஆராய தாம் தயாராக இருப்பதாகவும் அப்பகுதி பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க...)

## வரி விளம்பரம்

**N.I.T.M**

கணினிப்பயிற்சி நிலையம் (ICRC முன்பாக) புதுக்குடியிருப்பு. புதிய பிரிவு ஆரம்பம் 01-02-2004 ஞாயிறு மாலை 4.30 மணி.
**DIP in Ms.Office.2000xp** (3966)

### தவறிவிட்டது

மரியநாயகம் போல் எனும் பெயர் கொண்ட அ.அட்டையும், பயண அனுமதி அட்டையும் உள்ளடங்கிய எனது கைப்பை இரணைமடுச் சந்திக்கும் கரடிப்போக்குச் சந்திக்கும் இடையில் பிரதானசாலையில் 30.01.2004 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (4201)


# விளையாட்டு கருத்தரங்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கிளித்தட்டு (தாச்சி) விளையாட ஆர்வமுடையவிளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த இளைஞர்-யுவதிகளுக்கான சந்திப் பொன்று இன்று மாலை3மணிக்கு கிளி. மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கலந்துகொள்ள விரும்புவோர் இன்று மாலை நடைபெறும் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளி. மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ராஜா கேட்டுள்ளார்.

# வன்னியின் எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்யும் நிலையில் மாகாண கல்வி அமைச்சு இல்லை

## மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்

(அலுவலக செய்தியாளர்)

வன்னிப்பெருநிலப்பரப்பிலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதென்பது மறுக்கமுடியாத உண்மை.. இருப்பினும் எல்லா வித தேவைகளையும் பூர்த்தி செய்யும் அளவிற்கு மாகாணகல்வி அமைச்சு இல்லை.

இவ்வாறு நேற்று கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற ஜி.ரி.இசற்/பி.இ.எஸ்.எவ்/ வி.இ.ஆர்.பி/ புதிய பணிமனையினை சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்துவைத்து உரைநிகழ்த்துகையில் வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இந் நிலையிலும் கல்வி அபிவிருத்தியினை மேம்படுத்துவதற்கு நாம் பல வழிகளிலும் முயன்று வருவதுடன் நாங்கள் எங்களால் ஆன முயற்சிகளை இதற்கெனமேற்கொண்டு வருகின்றோம். இந்த வகையில் ஜி.ரி.இசற் நிறுவனம் மாகாண அமைச்சுடன் இணைந்து கல்வி வளர்ச்சிக்கு முக்கியமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் பல வழிகளிலும் உதவி வருகின்றமை வரவேற்கத்தக்கது என்றார்.

கிளிநொச்சி ஜி.ரி.இசற் நிறுவன திட்டமுகாமையாளர் அ.கந்தசாமி தலைமையில் நேற்றுப் பகல் 11.30 மணிக்கு நடைபெற்ற மேற்படி நிகழ்வில் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், வன்னிவலயப் பொறுப்பாளர் ஞானம், ஜி.ரி.இசற் நிறுவனதேசியப்பணிப்பாளர் முரளிதரன், நிறுவனத்தைச் சேர்ந்த மல்காந்திபெரேரா, கிறிஸ்ரி, கிளி/முல்லை/துணுக்காய் /மடு வலயக்கல்விப்பணிப்பாளர்கள், கியூடெக் நிறுவன இணைப்பாளர் கனேசபிள்ளை, கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம் மற்றும் கிளி.வலய பாடசாலை அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். காரியாலய பெயர்ப்பலகையினை ஜி.ரி.இசற் நிறுவன தேசிய பணிப்பாளர் முரளிதரன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

பாடசாலைச் சிறுவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)




# தமிழீழ மாணவர் அமைப்பின் கணினிக் கருத்தரங்கு

தமிழீழ மாணவர் அமைப்பின் கணினிக்கருத்தரங்கு கடந்த புதன் காலை 9 மணிக்கு வடமராட்சி கிழக்கில் ஆரம்பமாகியுள்ளது. மேற்படி கருத்தரங்கானது யா/மருதங்கேணி இ.த.க. பாடசாலையின் லெப்.கேணல் கலாத்தன் ஞாபகார்த்த படிப்பக மண்பத்தில் வரும் 8ம் திகதி வரை நடைபெறும்.

இக்கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வுகள் வடமராட்சி வலய கல்விக் கழகப்பொறுப்பாளர் கி. தாயகன் தலைமையில் நடைபெற்றது. பொதுச் சுடரினை மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி திரு.பா.இரகுநாதன் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியினைகடற்புலிகளின் வடமராட்சி கிழக்கு அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு.தீபன் ஏற்றி வைத்தார். மாவீரர்களின் திருவுருவப்படத்திற்கான ஈகச் சுடர்களை வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவன செயலாளர் வ.தவராசா அவர்களும் யாழ்/மருதங்கேணி இ.த.க பா.அதிபர், நா.நவநீதமணி அவர்களும் யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலய அதிபர் திரு.வீ. இந்திரலிங்கம் அவர்களும் ஏற்றிவைத்தனர். அகவணக்கம், தலைமையுரைகளைத் தொடர்ந்து ஆசியுரையினை கோட்டக்கல்வி அதிகாரி அவர்களும், கணினி தொடர்பான அறிமுக உரையினை தமிழீழ மாணவரமைப்புப் பொறுப்பாளர் செ. இராணிமைந்தன் அவர்களும் சிறப்புரைகளை கடற்புலிகளின் அரசியல் துறையைச்சேர்ந்த த.விநாயகம் யா/உடுத்துறை ம.வி. அதிபர் திரு.அ.சா.அரியகுமார் ஆகியோர் ஆற்றினர்.

# வலி.வடக்கு இடம் பெயர்ந்த மக்கள் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஏற்பாடு

வலிகாமம் வடக்குப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றில் ஈடுபடவுள்ளனர்.

கடந்தகால ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மூலம் மேற்படிப் பகுதியிலுள்ள உள்ள இடங்களை இரா ணுவ அதியுயர் பாதுகாப்பு வலய மாக பிரகடனப்படுத்தி வைத்துள்ள படையினர் புரிந்துணர்வு உடன் படிக்கையின் பின்பும் இப்பகுதி களில் மக்களை மீளக்குடியமர அனுமதிக்கவில்லை.

இதனால் மேற்படிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த 10ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது சொந்த வாழ்விடங்களை இழந்துள்ளனர். இவற்றில் 8ஆயிரத்து 223 குடும்பங்கள் யாழ். மாவட்டத்தில் அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றன.

இந்நிலையில் தமது இயல்பு வாழ்வுக் கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரியும் தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகசபை கோரிக்கையடிப்படையில் இனப்பிரச்சினைக்கான தீர்வை ஏற்படுத்தக்கோரியும் தம் நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்தும் விதமாகவும் சிறிலங்காவின் சுதந்திர தினமான எதிர்வரும் 4ஆம் திகதியன்று இவ் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக் கவுள்ளனர். அத்துடன் அன்றைய தினத்தை ஒரு கரிநாளாகவும் அனுஸ்டிக்க ஏற்பாடு செய்துள்ளனர். இப்போராட்டம் வலி.வடக்குப் பிரதேச செயலகம் முன்பாக நடத் தப்படும் எனவும் இதில் பல்லாயிரக் கணக்கானோர் ஈடுபடவுள்ளனர் எனவும் இப்போராட்டத்தை ஒழுங்கு செய்துள்ள வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் வாழும் நலன்புரிச்சங்கங்களின் சமாசத் தலைவர் த.கணேஸ் தெரிவித்துள்ளார். (23)

# முல்லை. காவல் பணிமனையின் விழிப்பூட்டும் நடவடிக்கை

முல்லைத்தீவு காவல் பணிமனையினர் மக்களுக்கு விழிப்பூட்டும் நடவடிக்கையினை தீவிரமாக மேற்கொள்கின்றனர்.

அந்த வகையில் கடந்த 25ம் திகதியன்று சிலாவத்தை, சிலாவத்தை தெற்கு, முல்லைதெற்கு ஆகிய மூன்று கிராமமக்களுக்கான விழிப்பூட்டும் கருத்துரைகளை முல்லைத்தீவு காவல் பணிமனைப் பொறுப்பாளர் து.சிறிதரன் வழங்கினார்.

அன்று பிற்பகல் நான்கு மணிக்கு ஆரம்பமான நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர். குற்றத்தடுப்பு நடவடிக்கை, வீதியொழுங்கு நடவடிக்கை தொடர்பான கருத்துக்கள் மக்களுக்கு தெளிவாக வழங்கப்பட்டன.

அத்துடன் இரவில் குற்றச் செயல்களைத்தடுக்கும் நோக்குடன் இரவுக்காவல்பணியுடன் கூடிய வீதி ரோந்து நடவடிக்கையினையும் முல்லைத்தீவு காவல் பணிமனையினர் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (20)

# பெண் ஆரோக்கிய நிபுணரின் சிகிச்சை முகாம் நடைபெறுகிறது

அமெரிக்காவில் இருந்து வருகை தந்திருக்கும் பெண் ஆரோக்கிய நிபுணர் சாமுவேல் அவர்களினால் மகப்பேற்று பெண் ஆரோக்கிய சிகிச்சை முகாம் இன்று தொடக்கம் நாளை மறுதினம் வரை கிளிநொச்சியில் அமைந்துள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் நடைபெறவுள்ளது.

காலை 8மணி தொடக்கம் மாலை 2மணிவரை நடைபெறவுள்ள இச்சிகிச்சையின் போது மகப்பேற்று பெண் ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளது. அத்துடன் தேவையானவர்களுக்கு மாலையில் சத்திரசிகிச்சைகளும் மேற்கொள்ளப்படும்.

பயன்பெறவிரும்புவோர் மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

அண்மையில் வெளியான புலமைப்பரிசில் பரீட்சையில் 160புள்ளிகளைப் பெற்றகிளி மாவட்டத்தில் இரண்டாவது இடத்தினைப் பெற்ற இராமநாதபுரம் ம.வியைச் சேர்ந்த டாக்டர்.திரு.திருமதி.. ஜெயராஜா தம்பதிகளின் புதல்வன் செல்வன் ஜெயமாருதி அவர்கள் மேன்மேலும் பல வெற்றிகளைப்பெற்று கல்வியில் சிறக்கப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் திரு.திருமதி பாலசுப்பிரமணியம் குடும்பத்தினர், டாக்டர். திரு.திருமதி சிவசுப்பிரமணியம் குடும்பத்தினர், திரு.திருமதி முகுமாரசாமி குடும்பத்தினர்.



**வாணிவைத்திய நிலையம்,**
**முல்லைசாலை,**
**விசுவமடு.** (4202)


# 'கடல் வளம்' பாடத்துக்கு ஆசிரியர்களை ஆட்சேர்க்க விண்ணப்பம் கோருக

(திருகோணமலை)

'கடல்வளம்' பாடத்தைப் போதிப்பதற்கான தமிழ்மொழி மூலஆசிரியர்கள் வடக்கு-கிழக்கு தமிழ்மொழி மூல பாடசாலைகளில் நியமிக்கப்பட வேண்டும். இதற்கு ஏதுவாக ஜீ.சி.ஈ. உயர்தரத்திற்கு தகுதி பெற்றவர்கள் மத்தியில் இருந்து 'கடல்வளம்' பாடம் போதிக்கும் ஆசிரியர்களைத் தெரிவு செய்யக்கூடியதாக ஜீ.சி.ஈ. உயர்தர ஆசிரியர் ஆட்சேர்ப்புத் திட்டம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று மனிதவள அபிவிருத்திக்கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. வடக்குக் கிழக்கு மாகாணக்கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் கொழும்பு கல்வி அமைச்சின் செயலாளருக்கு இது தொடர்பாக கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் செயலாளர் தியாகலிங்கம் தெரிவித்திருப்பதாவது; "ஜீ.சி.ஈ. உயர்தரத்திற்குத் தகுதி பெற்றவர்கள் மத்தியிலிருந்து ஆயிரம் தமிழ்மொழி மூல ஆசிரியர்களைத் திரட்டும்போது, 'கடல்வளம்' போதிக்கும் ஆசிரியர்களைத் தெரிவு செய்யக்கூடியதாக விண்ணப்பங்கள் கோரப்பட வேண்டும் என்று நான் கோரியிருந்தேன். ஆனால் ஜனவரி 23இல் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் 'கடல்வளம்' பாடம் சேர்க்கப்படவில்லை.

வடக்கு கிழக்கு மாகாணத்தின் கரையோரப் பாடசாலைகளில் கடல்வளம் ஒரு பாடமாகத் தற்போது போதிக்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு ஜீ.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு பல மாணவர்கள் 'கடல்வளம்' பாடத்திற்குத் தோற்றவிருக்கின்றனர். வடக்கு கிழக்கு மாகாணம் நீண்ட கடற்கரையைக் கொண்டது. மன்னார், பருத்தித்துறை, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை வரை கடலோரப்பிரதேசம் நீள்கிறது. இப்பிரதேசங்களில் கடற்றொழில் பிரதான தொழிலாக மாறியுள்ளது. இதனால் ஆண்டுதோறும் 'கடல்வளம்' பாடத்துக்குத் தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனால் 'கடல்வளம்' பாடத்தைப் போதிக்கும் ஆசிரியர்களின் சேவையை வழங்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. 4.1.1999ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 99/12 இலக்க சுற்று நிருபத்தின்படி ஜீ.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப பாடங்களில் ஒன்றாக 'கடல்வளம்' பாடமும் காட்டப்பட்டுள்ளது. ஆகவே 'கடல்வளம்' பாடத்துக்கும் ஜீ.சி.ஈ. உயர்தரத்தகுதி பெற்றவர்கள் விண்ணப்பிக்கக் கூடியதாக வர்த்தமானி அறிவித்தலில் திருத்தம் செய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம்." என்று மாகாணக் கல்விச் செயலாளர் இ.தியாகலிங்கம் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (25)

## பிற்போடல்

(அலுவலக செய்தியாளர்)

கண்டாவளைப் பிரதேசசெயலகத்தினால் எதிர்வரும் 4,5ஆம் திகதிகளில் நடாத்தப்படவிருந்த பெரு விளையாட்டுக்களின் இறுதிப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் அத் தினங்களில் நடாத்தப்பெறமாட்டாதென கண்டாவளைப்பிரதேசச் செயலர் சீ.சிவசொருபநாதபிள்ளை தெரிவித்துள்ளார்.

அத்துடன் இறுதிப்போட்டிகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார். (சோ)

## புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் ஊரக எழுச்சிப் பேரவை புனரமைப்பு

கடந்த 20,22,23 ஆம் திகதிகளில் முறையே கைவேலி, தேவிபுரம்(ஆ) பகுதி, தேவிபுரம் (அ) பகுதி, வள்ளிபுனம் ஆகிய கிராமங்களுக்கான எழுச்சிப்பேரவைகள் புனரமைப்பு செய்யப்பட்டன. மேற்படி நிகழ்வுகளுக்கு வள்ளிபுனம் வலயப் பொறுப்பாளர் மயூரன் தலைமை தாங்கினார். சிறப் புவிருந்தினர்களாக முல்லை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் முகுந்தன் புதுக்குடியிருப்புப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் பிறையாளன் இப்பகுதிகளுக்கான கிராம சேவையாளர்களும், செடோநிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக்கழக உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இதனிடையே கடந்த 27ஆம் திகதி இரவு 7.00 மணிக்கு, வள்ளிபுனம் வலய மண்டபத்தில் சமகால நிகழ்வுகள் பற்றிய கருத்தரங்கும், கடலோரக்காற்று உட்பட 3வீடியோ திரைப்படக்காட்சிகளும், வலயப் பொறுப்பாளர் மயூரன் தலைமையில் காண்பிக்கப் பட்டது.

# சவுதி தலைநகரில் ஆயுததாரிகள் தாக்குதல்

# ஐந்து பொலிசார் பலி; ஆயுதங்கள் மீட்பு!

## 20 லட்சம் ஹஜ் யாத்திரிகர்கள் கடும் சோதனை

(ரியாத்)

**சவுதி அரேபிய தலைநகரான ரியாத்தில் ஹஜ் யாத்திரிகர்கள் மீது நடத்தப்படவிருந்த தாக்குதலொன்று நேற்று முறியடிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது. இதன்போது ஐந்து பொலிசார் பலியாகினர்.**

ரியாத்தில் ஹஜ் யாத்திரிகர்கள் மீது தாக்குதல் இடம்பெறவுள்ளதாகக் கிடைக்கப்பட்ட தகவலையடுத்து சுற்றிவளைப்புத் தேடுதலை நடத்திய சவுதிப் பொலிசார்மீது பயங்கரவாதிகள் குழுவொன்று நேற்று திடீர் தாக்குதலை நடத்தியது.

இரு தரப்பினரிடையே இடம்பெற்ற மோதல்களில் ஐந்து பொலிசார் கொல்லப்பட்டதாக சவுதி அரச வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

மேலும், சம்பவத்துடன் தொடர்புபட்டதான மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் நவீன ஆயுதங்கள் வெடிபொருட்கள் என்பன ஏற்றப்பட்ட நிலையில் வாகனமொன்றும் சம்பவ இடத்திலிருந்து பொலிசாரால் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து சவுதி அரேபியாவில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. சுமார் இருபது இலட்சம் ஹஜ் யாத்திரிகர்கள் கடும் சோதனையின் பின்பே மக்கா, மதினா நகர்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதே சமயம் கடந்த ஆண்டு ரியாத் நகரில் இதே காலப்பகுதியில் இடம்பெற்ற தாக்குதலொன்றில் ஐம்பது ஹஜ் யாத்திரிகர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



இஸ்ரேலிய பொலிசாரால் விடுவிக்கப்பட்ட லெபனான் சிறைக்கைதி முஸ்தபாடிராணி ஜேர்மனுக்கு விமானத்தில் அனுப்புவதற்கு பொலிசாரால் அழைத்துச் செல்லப்படுகின்றார்.

# ஈராக்கிற்கு ஜப்பான் படைகள் செல்ல செனட் சபை அடுத்த வாரம் ஆராயும்!

## பிரதிநிதிகள் சபை அங்கீகாரம்

(டோக்கியோ)

ஈராக்கில் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு உதவி செய்யவென ஜப்பானிய வீரர்களை பாக்தாத்திற்கு அனுப்புவது சம்பந்தமான பிரேரணைக்கு ஜப்பானின் பிரதிநிதிகள் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜப்பானிய அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில், இப்பிரேரணை பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள போதிலும் பாராளுமன்ற அங்கத்தவர்கள் பலதரப்பட்ட கருத்துக்களை வெளியிட்டிருந்தனர் எனக் கூறியுள்ளனர். அதிருப்தியடைந்த அங்கத்தவர்கள் பலர் வாக்களிப்பை பகிஷ்கரித்துள்ளனர். பலர் பாராளுமன்றக் கட்டடத்திலிருந்து வெளிநடப்புச் செய்துள்ளனர். இப் பிரேரணையை மக்கள் பிரதிநிதிகள் சபை ஏற்றுக் கொண்டிருப்பதனால் ஜப்பானின் செனட் சபை அடுத்த வாரம் இதனை ஆராயவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க 340 ஆசனங்களைப் பெறும்

## 'இந்தியாருடே' கணிப்பு

(புதுடில்லி)

இந்திய மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கட்சி தலைமையிலான ஆளும் தேசிய சனநாயகக் கூட்டணிக்கு அமோக வெற்றி கிடைக்குமென "இந்தியாருடே" பத்திரிகையின் கருத்துக்கணிப்பு தெரிவிக்கின்றது.

'இந்தியாருடே"யின் இந்தக் கருத்துக்கணிப்பின் படி மொத்தமுள்ள 545 ஆசனங்களில் பா.ஜ. கூட்டணி 300 முதல் 340 இடங்களைக் கைப்பற்றும் எனவும் அது கூறியுள்ளது.

தமிழ் நாட்டில் அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்துடன் பா.ஜ.கட்சி கூட்டு வைப்பதற்கு முன்னர் இந்தக் கருத்துக்கணிப்பு நடைபெற்றுள்ளது.

காங்கிரஸ் கட்சிக்கும் அதன் தோழமைக்கட்சிகளுக்கும் 105 முதல் 115வரையான இடங்கள் கிடைக்கலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏனைய கட்சிகளுக்கு 95முதல் 105இடங்கள் கிடைக்கும் எனவும் அந்தக்கருத்துக்கணிப்பில் தெரிவித்துள்ளது.


98 நாடாளுமன்றத் தொகுதிகளில் சுமார் 17ஆயிரம் வாக்காளர்களுக்கிடையே நடத்தப்பட்ட இந்தக கருத்துக்கணிப்பில் பா.ஜ.கூட்டணியைக் காட்டிலும் 42சதவீத வாக்குகள் குறைவாகவே காங்கிரஸ் கூட்டணிக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகக் கூறுகின்றது.

# உளவு அமைப்புக்களின் தவறை விசாரணை செய்ய புஷ் மறுப்பு

ஈராக்கின் மீது போர் மேற்கொள்வதற்கு முன்னர் அமெரிக்க உளவு அமைப்புக்கள் தவறு செய்தனவா? என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் விசாரணை நடத்தவேண்டும் என்ற கோரிக்கையை புஷ் நிராகரித்துள்ளார்.

சதாமிடம் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் இருப்பதாக உளவு ஏஜென்சிகள் தகவல் கொடுத்துள்ள போதிலும், ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இல்லாமல் போன காரணங்களை கண்டறிவது அவசியமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பேரழிவு ஆயுதங்கள் எவற்றையும் தான் ஈராக்கில் காணவில்லை எனக் கூறி ஈராக்கில் ஆய்வுகளை நடத்துவதற்கு பொறுப்பான டேவிட் கே ராஜினாமா செய்திருந்தது தெரிந்ததே.




இந்தியா-போபால் நகரில் மகாத்மா காந்தியின் 56வது சிரார்த்த தினத்தன்று அண்ணாரின் சிலைக்கருகில் தேசியக்கொடி வர்ணத்தில் முகத்தை அலங்கரித்துள்ள சமாதானத் தொண்டர்கள்.

# 2004–நோபல் சமாதான விருதிற்காக புஷ், பிளேயரின் பெயர்கள் பிரேரிப்பு!

2004 ஆம் ஆண்டிற்கான நோபல் சமாதான விருதுக்காக அமெரிக்க சனாதிபதி புஷ்சும், பிரிட்டிஷ் பிரதமர் ரொனிப்பிளேயர் ஆகியோரின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டுள்ளன.

ஈராக்கில் பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்கள் இருப்பதை நிரூபிக்க முடியாத நிலையிலேயே இவ்விருவரினதும் பெயர்கள் பிரேரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நோபல் சமாதான விருதுகளை பிரேரணைகள் முன்வைக்க வேண்டிய இறுதிநாள் இன்றாகும். இதனிடையே பிரேரணைகள் தமக்கு வந்து குவிந்த படியிருப்பதாக நோர்வே நோபல் மன்ற பணிப்பாளர் தெரிவித்துள்ளார். அத்துடன் நாளாந்தம் அதிகமான கடிதங்களும் 1500 இற்கும் மேற்பட்ட மின் அஞ்சல்களும் கிடைப்பதாக அவர் தெரிவித்துள்ளார். இவற்றில் விருதுகளை பெறக்கூடியவர்களுக்கு ஆதரவாகவும், எதிராகவும் கருத்துக்கள் இருப்பதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுவரைகிடைத்துள்ள பிரேரணைகளில் பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர், செக் நாட்டின் முன்னாள் சனாதிபதி, சீன பிரமுகர்களும் அடங்குவதாகத் தெரிவித்துள்ளார்.



## தி.மு.க.–காங்கிரஸ் கூட்டு உறுதி

(சென்னை)

வரும் மக்களைத் தேர்தலில் தமிழகத்தில் சனநாயக முற்போக்குக் கூட்டணிக்கு தலைமையேற்றிருக்கும் திராவிட முன்னேற்றக்கழகத்துடன் காங்கிரஸ் கட்சி தொகுதிப் பங்கீடு குறித்து முடிவை எட்டியுள்ளது.

சென்னையில் தி.மு.க.தலைமையகத்தில் நடைபெற்ற பேச்சின் பின்னர் தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் வி.கே. வாசன் இதனை அறிவித்தார் எனினும் காங்கிரஸிற்கு எத்தனை இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்பதை அவர் தெரிவிக்கவில்லை.

# ஈராக்கில் விரைவில் தேர்தல் ஆராய அனான் பணிப்பு

அமெரிக்காவினால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ள ஈராக்கில் உரிய காலத்திற்கு முன்னரே தேர்தல்களை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்வதற்காக ஐக்கிய நாடுகள் நிபுணர்கள் அடங்கிய குழுஒன்று ஒருசிலதினங்களுக்குள் அங்குசெல்ல வேண்டுமென ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் ஷியா மதகுருமார் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து அனான் இத்தீர்மானத்தை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



அண்மையில் பாக்தாத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டோரின் உறவினர்கள் அழுது புலம்பியவாறு வைத்தியசாலை நோக்கிச் செல்கின்றனர்.

# நீர், உயிரினங்கள் உள்ளதா என்பதை அறிய செவ்வாயில் ரோபர் தரையிறக்கம்

## -ஸ்பிரிட்டின் பணியும் தொடர்கிறது

செவ்வாய்க்கிரகத்திலுள்ள 'ஒப்பூனிட்டி' ஆய்வு கலத்திலிருந்து ரோபர் என்ற கலம் நேற்று தரையிறங்கியுள்ளது. அங்கு ஈரலிப்பிருக்கின்றதா? அத்துடன் உயிரினங்கள் வாழ்வதற்கான வளங்கள் இருக்கின்றதா? என்பதை ஆராய இக்கலம் அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை செவ்வாயில் தரையிறங்கியுள்ள 'ஸ்பிரிட்' விண்கலம் 10 நாட்களின் பின்னர் மீண்டும் தனது பணியில் ஈடுபட்டுள்ளதாக நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அவ்விண்கலத்தில் பொருத்தப்பட்டிருந்த கனிணியில் அளவுக்கதிகமான தகவல்கள் சேர்ந்திருந்தமையால் அது செயலிழக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதென கூறப்படுகின்றது. அத்துடன் 'ஸ்பிடிட்டின்' இயக்கத்திற்கு பொறுப்பான விஞ்ஞானி அநாவசியமான தகவல்களை நீக்கிவிடுமாறு ஸ்பிபிட்டிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ஆசியாவை அச்சுறுத்தும் 'பறவைக் காய்ச்சல்'

அ. கலைவாணி

ஆசிய நாடுகளை தற்போது பயத்தில் உறைய வைத்திருப்பது "பறவைக்காய்ச்சல்" எனும் நோயாகும். பறவைகளுக்கு மட்டுமே இந்நோய் ஏற்பட்டிருந்தால் ஆசிய நாடுகள் கலங்கி இருக்க மாட்டாது. ஆனால் பறவைகளில் ஏற்பட்ட இந்த நோய் தற்போது மனிதர்களையும் தன்னுள் இழுத்துக்கொள்ளத் தொடங்கியுள்ளது. அந்த வகையில் இரண்டு வாரத்தினுள் 13 பேர் உயிரிழப்பது என்பது சாதாரணமாக இருக்கமுடியாது.

இதனால் தான் ஆசிய நாடுகள் கலக்கத்தில் இருக்கின்றன. இதுவரை இந்தப் பறவைக் காய்ச்சல் நோய் 13 மனித உயிர்களைப் பலி கொண்டுள்ளது என்பது அச்சத்திற்குரிய ஒன்றாகும்.

அது மட்டுமன்றி இந்தப் பறவைக் காய்ச்சல் தெற்காசிய நாடுகளிலும் பரவத் தொடங்கியுள்ளது. இதனால் தெற்காசிய நாடுகள் எப்படி இந்நோயைக் கட்டுப்படுத்துவதென்றும் இல்லாதழிப்பது என்றும் திணறுகின்றன.

அதேநேரம் பறவைகள் ஏற்றுமதி முட்டைகள் உறபத்தி செய்யும் நாடுகளுக்கு இந்நோய் பெரும் அச்சுறுத்தல் காரணியாக மாறியுள்ளது. பறவைகள் ஏற்றுமதி, முட்டைகள் உற்பத்தி நாடுகளின் வர்த்தகம் இதன் காரணமாக முடக்கப்பட்டுள்ளது. பறவைகளை, முட்டைகளை இறக்குமதி செய்யும் நாடுகள் தமது நாட்டிலும் பறவைக் காய்ச்சல் நோய் ஏற்படலாம்... எனும் அச்சம் காரணமாக பறவைகளை, முட்டைகளை இறக்குமதி செய்ய பயம் கொண்டு தடை செய்திருக்கின்றன.

அதேநேரம் பறவைகளை ஏற்றுமதி செய்யும் நாடுகள் முன்னெச்சரிக்கை காரணமாகவும், பறவை நோய் காரணமாகவும் பறவைகளை அழித்து வருகின்றன.

இந் நடவடிக்கை அந்நாடுகளின் ஏற்றுமதி வருமானத்தை மிகவும் பாதிக்கின்றது. இதனால் அந்நாடுகள் பீதியடைந்துள்ளன.


கடந்த சனவரி மாதம் 11ஆம் திகதி வியட்னாமில் இந்த நோய் பறவைக்காய்ச்சல் என்று இனம் காணப்பட்டது. பறவைக்காய்ச்சல் என்று இனம் காண்பதற்குள் வியட்னாமில் ஆறு பேர் பலியாகியுள்ளார்கள். 09 பேர் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள். 40 ஆயிரம் கோழிகள் செத்துமடிந்துள்ளன. 25 ஆயிரம் கோழிகளை வியட்னாம் அழித்துள்ளது.

எச்ஐந்து என் இரண்டு, (H-5,N-2) எச்ஏழு, எச் ஒன்பது (H-7,N-9) எனும் வைரஸ் கிருமிகள் பறவைகளைத் தாக்குகின்றது. இதில் எச்.ஐந்து வைரஸ் தாக்கும்போது முக்கியமாகக் கோழிகள், வாத்துக்கள் மூச்சு திணறல் ஏற்பட்டு மடிகின்றன.

இந்த எச்.ஐந்து வைரஸ் தாக்கிய கோழி, வாத்து இறைச்சியை மனிதன் உண்பதனால், மனிதனுக்கு மரணம் ஏற்படுகின்றது. என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதேநேரம் பறவைக்காய்ச்சல் நோய் சார்ஸைவிட மிகவும் வேகமாகப் பரவி வருகின்றது. மனிதனையும் அதேவேகத்தில் பதம் பார்க்கின்றது. இந்தப் பறவைக்காய்ச்சல் நோய் 1997இல் கூட ஏற்பட்டுள்ளது. ஹொங்கொங்கில் இந்த நோய் ஏற்பட்டு பறவைகள் இறந்துபோயின. அதன் தாக்கத்தால் ஆறுபேர் உயிரிழந்தனர். அத்துடன் இந்நோயும் அமுங்கிப்போனது.

மீண்டும் தற்போது வியட்னாமில் ஆரம்பித்து தென்கொரியா,டேலாவோஸ், தாய்வான், தென்கொரியா, கம்போடியா, ஜப்பான், லாவோஸ், தாய்லாந்து, இந்தோனேசியா, சீனா என்பவற்றுடன் பாகிஸ்தானிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



கோழி ஏற்றுமதியில் முதல் ஐந்து நாடுகளில் தாய்லாந்தும் ஒன்றாகும். இங்கு மட்டும் 76 மாகாணங்களில் 10 மாகாணங்களில் இந்நோய் பரவியிருக்கிறது. இதனை தாய்லாந்தே பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த 10 மாகாணங்களில் இரண்டு மாகாணங்களின் இயக்கம் முற்றாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

பாதிக்கப்பட்ட 10 மாகாணங்களிலும் 90லட்சம் கோழிகள் முன்னெச்சரிக்கை காரணமாக கொல்லப்பட்டுள்ளன. தாய்லாந்தில் ஆறு வயதுச் சிறுவன் உட்பட ஏழுபேர் பலியானதுடன் இந்நோய் இரண்டு பேருக்கு இருப்பதாக இனம் காணப்பட்டிருக்கின்றது. அதேபோல் தாய்லாந்தின் எல்லையை அடுத்துள்ள மியான்மார், லாவோஸ் பண்ணைகளில் பறவைக் காய்ச்சல் பரவலாம் எனும் அச்சம் காரணமாக பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிகள், வாத்துக்கள் அழிக்கப்படும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

இந்த நோய் மனிதர்களை மிகவும் இலகுவாகப் பீடிக்கக்கூடியதொன்றென்று உலக சுகாதார நிறுவனம் அச்சம் வெளியிட்டுள்ளது.

இதேவேளை சீனா உலக முட்டை உற்பத்தியில் 46 சதவீதம் உற்பத்தி செய்கின்றது. வாத்துப் பண்ணையில் பறவைக் காய்ச்சல் உறுதியாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இந்தப் பண்ணையில் 14000 வாத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. எனினும் இந்த நோயின் பரவலைகட்டுப்படுத்துவது கடினம் என்று சீன ஆய்வாளர்கள் கவலை கொண்டுள்ளார்கள்.

சார்ஸ் நோயும் சீனாவில் தான் ஆரம்பமாகியது. உலக நாடுகளுக்கும் பரவியது. இதன் காரணமாக சீனாவின் பொருளாதாரம் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்திருந்தது. எனினும் சார்ஸ் கட்டுப்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டதையடுத்து, உல்லாசப்பயணிகள் வருகையும் அதிகரித்துள்ளதாக, சீனா சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்த இந்த வேளையில், அங்கு பறவைக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இதனால் சீனாவின் ஏற்றுமதி மந்தமடைந்துள்ளது. பழையபடி உல்லாசப் பயணிகள் வருகையும் இறங்கியுள்ளதாக சீன ஆய்வாளர்கள் கவலை வெளியிட்டுள்ளார்கள்.

இதேவேளை பறவை நோயைக்கட்டுப்படுத்துவதற்கு சீனா சர்வதேச உதவிகளையும் கோரியுள்ளதுடன், உலக சுகாதார நிறுவனத்திடம் ஆலோசனையும் கேட்டுள்ளதாக சீன அரசு கூறியுள்ளது.

பறவைக்காய்ச்சல் கட்டுப்படுத்தப்படாத வரை சீனாவின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் போக்கை எதிர்நோக்கலாம் என்று சீன அரசு அச்சம் வெளியிட்டிருக்கிறது.

இதேபோல் பாகிஸ்தான் 20 இலட்சம், தைவான் 55ஆயிரம், ஜப்பான் ஆயிரம், தென்கொரியா, இந்தோனேசியா மில்லியன் கணக்கான வாத்துக்கள், கோழிகளை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அழித்துள்ளன.

பறவை மூலமே மனித உடலுக்குள் இந்த வைரஸ் காய்ச்சல் ஏற்படுகின்றது என்று கூறப்படும் அதே வேளை, மனிதரிலிருந்து மனிதருக்குக் கூட இந்த நோய் ஏற்படாது என்று கூற முடியாதுள் ளது என்று உலக சுகாதார நிறுவன அதிகாரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதனால் இன்றைய நிலையில் உலக நாடுகள் பறவைக் காய்ச்சல் நோயை கட்டுப்படுத்த முடியாது திணறி வருகின்றன என்றே கூறலாம்.

அதனால் தான் பறவைக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள ஆசிய நாடுகளின் பிரதிநிதிகள் அவசரஅவசரமாக பாங்கொக்கில் கூடிஇந்நோயை இல்லாதழிப்பது பற்றி கலந்தாலோசிக்கவுள்ளனர்.

அதுமட்டுமன்றி இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அவசர நிதி மற்றும் நிபுணத்துவ உதவிகளை சர்வதேச நிறுவனங்கள் கோரியிருக்கின்றன. இவையனைத்தும் நன்மையளிக்குமா.... என்பது கேள்விக்குறியாகவேயுள்ளது.

ஏனெனில் சார்ஸ் நோய் உலகில் ஆயிரக்கணக்கானவர்களை தனக்குள் புதைத்துக் கொண்டுள்ளது. என்றாலும் இதுவரை சார்ஸ் நோய்க்கு மருந்து கண்டு பிடிக்கப்படவில்லை. சார்ஸ் நோய்க்கான மருந்து கண்டுபிடிப்பதற்கு இரண்டு மூன்று வருடங்கள் எடுக்கும் என்று உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ள நிலையில் பறவைக்காய்ச்சலுக்கு மட்டும் உடனடியாக மருந்து கண்டுபிடிக்கப்படுமா.......

ஏனெனில் சார்ஸை விடபறவை காய்ச்சல் மிகவும் வேகமாக மரணத்திற்கு இட்டுச்செல்லும் விஷத்தன்மை கொண்ட நோய்என்று உலக சுகாதார நிறுவனமே கூறியுள்ள நிலையில் சார்ஸ் போல் பறவைக் காய்ச்சலும் அதிக மரணத்திற்கு இட்டுச் செல்லலாம் என்றும் எதிர்பார்க்க முடியும்.

இதனால் உலக நாடுகளில் பறவைகளை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் பொருளாதாரம் மந்தகதியடையலாம் என்றும் நம்பலாம். பாகிஸ்தானில் இந்நோய் ஏற்பட்டுள்ளதையடுத்து இந்தியா தனது நாட்டிற்குள்ளும் பறவை நோய் ஏற்படலாம் என அச்சம் கொண்டுள்ளது.

அதனால் உடனடியாக பறவைகளை, முட்டைகளை இறக்குமதி செய்ய இந்திய மத்தியரசு தடைசெய்துள்ளது.

இதேபோல் இலங்கையும் வருடம் ஒன்றிற்கு ஆறு இலட்சம் கோழிகளையும் 500 அலங்காரப் பறவைகளையும் பிரிட்டன், நெதர்லாந்து, மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்து வந்தது. தற்போது அதற்கு இலங்கை அரசு தடை விதித்துள்ளது.

அதேநேரம் வெளிநாடுகளிலிருந்து பறந்துவரும் பறவைகள் மூலம் பறவைக்காய்ச்சல் நோய் ஏற்படும் அபாயம் உள்ளதாக இலங்கை சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்திருக்கின்றது.



எனவே பறவை நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கப்படாதவரை பறவைகள், முட்டைகள் ஏற்றுமதியை நம்பியிருக்கும் நாடுகள் முன்னேற்றத்திற்கு பதில் வீழ்ச்சியே அடைய முடியும்.

இந்நோய் காரணமாக இந்நோய் பரவியுள்ள நாடுகளுக்கு உல்லாசப் பயணிகள் வருகைஇல்லாது போகும். கோழி, வாத்துப் பண்ணைகளில் தொழில் புரிந்தவர்கள் தொழிலை இழக்க நேரும். இதனால் இந்நாடுகள் வேலையில்லாப் பிரச்சினை வறுமை என்பவற்றிறகும் முகம் கொடுக்க நேரிடும்.

ஆகமொத்தம் இதுவரை எயிட்ஸ் தான் ஆட்கொல்லி நோயாக இருந்து வந்தது என்றால் தற்போது சார்ஸ் பறவைக்காய்ச்சல் என்பனவும் எயிட்ஸை விட கொடிய ஆட்கொல்லி நோயாக உருவாகியுள்ளது.

எனவே இவற்றுடன் இன்னும் புதிய புதிய நோய்களும் உருவாக மாட்டாது என்றும் கூற முடியாது. ஆனால் நிலவில் மனிதன் குடியிருக்கப் போகின்றான், செவ்வாய் கிரகத்தில் தண்ணீர் இருக்கின்றது என்றெல்லாம் புதிதுபுதிதாக விஞ்ஞானம் விண்ணை தொட்டுக்கொண்டிருக்கிறது.

அதேவேளை விஞ்ஞானத்திற்குப் போட்டியாக மனித உயிரைப் பலிகொள்ளும் எயிட்ஸ், சார்ஸ், பறவைக்காய்ச்சல் போன்ற நோய்களும் உருவாகாமலில்லை.

ஆக விஞ்ஞானம் வளரவளர புதியநோய்களும் விஞ்ஞானத்துடன் போட்டி போடாமலில்லை. இறுதியில் வெற்றி பெறுவது விஞ்ஞானம் தான் என்றாலும் நோய்களுக்கான புதிய மருத்துவக் கண்டுபிடிப்புக்கள் உருவாகும் கால இடைவெளிக்குள் நோய்கள் தங்கள் உக்கிரத்தை காட்டாமலும் இருப்பதில்லை என்பது கவலைக்குரிய ஒன்றாகும்.

★★★

## சனாதிபதியின் சுயநல நடவடிக்கைகளாலே அத்தியாவசியப் பொருட்கள் விலையேற்றம்!

### -அமைச்சர் கபீர் ஹாசிம்

சனாதிபதி சந்திரிகா சுயஅரசியல் இலாபங்களுக்காக மூன்று அமைச்சுக்களைக் கையேற்றதன் பயனாக ஏற்பட்ட பணவீக்கம் மற்றும் பங்குச்சந்தை வீழ்ச்சி என்பவற்றின் காரணமாகவே அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன என்று மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் கபீர் ஹாசிம் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் சனாதிபதி மூன்று அமைச்சுக்களை ஏற்பதற்கு முன்னர் 94 ரூபாவாக இருந்த டொலரின் பெறுமதி இன்று 99 ரூபாவாக அதிகரித்துள்ளது.

நாம் ஆட்சியைப்பொறுப்பேற்கும் போது நாட்டின் வளர்ச்சி வீதம் 1.7 சதவீதமாக இருந்தது. இது 2002 இல் 3.5 ஆகவும் 2003 இல் 5.5 வீதமாகவும் 2003 இன் இறுதியில் 6.5 ஆக அதிகரித்திருக்கும், ஆனால் அதற்கிடையில் சனாதிபதி சுய நோக்கில் அமைச்சுக்களைப் பொறுப பேற்று விட்டார். இதனால் வளர்ச்சி பாதிக்கப்பட்டு விட்டது என பெறுமதி சேர்வரி(வற்) திருத்தச்சட்ட மூலத்தின இரண்டாம் நிலை வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரை யாற்றும் போது வியாழக்கிழமை மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் கூறியுள்ளார்.

## கோகிலாக்கண்டியில் படையினர் முட்கம்பி வேலிகள் அமைப்பு !

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் உள்ள கோகிலாக்கண்டி கடற்கரைகளில் புதிய முட்கம்பி வேலிகளை படையினர் அமைத்துவருவதாக அப்பகுதிமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி கடற்கரைகளில் புதியமுட்கம்பி வேலிகளை அமைத்து வரும் படையினர் அதற்கு அருகில உள்ள தமது கடலோரக் காவல் அரண்களையும் மண் மூட்டைகளையும் பரக்குற்றிகள் கொண்டு புனரமைத்து வருவதால் அது தமக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக அப்பகுதிகளில் தற்போது மீளக்குடியமர்ந்துள்ளோர் கூறியுள்ளார்கள். (33)

# அம்பாறை மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க தமிழ்க் கூட்டமைப்பு கோரல்

(திருமலை)

**அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு பெப்ரவரி மாதத்தில் நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள தேர்தல்களை அன்றைய தினம் நடத்த வேண்டாம் என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தேர்தல் ஆணையாளரைக் கோரியுள்ளது. கூட்டமைப்புப்பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிய கடிதத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.**

சம்பந்தன் தனது கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது; பெப்ரவரியில் அம்பாறை மாவட்டத்தில் சில உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய தேர்தல் நடத்தப்படவுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் அக்டோபர் மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு பெப்ரவரி மாதத்தில் தேர்தலை நடத்துவது பல காரணங்களுக்காகப் பொருத்தமானதாக இருக்காது. வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர், புதியவாக்கா ளர் இடாப்புக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இது கணிசமான மாற்றங்களை வாக்குரிமையைப் பயன்படுத்தும் உரிமையில் ஏற்படுத்தியுள்ளன.

அது மாத்திரமல்ல முன்னர் வேட்பு மனுக்களைத்தாக்கல் செய்த வேட்பாளர்களின் அந்தஸ்தில் கூட மாற்றங்களை ஏற்படுத்தியுள் ளன.ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் மீது நம்பத்தகுந்த தேர்தல்களை நடத்த முடியுமா? என்ற பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் பெப்ரவரி மாதத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தலாம் என்று அறிவிக்கப்பட்ட பெரும்பாலான இடங்களில் காணப்படும் தரை நிலவரம் வடக்கு- கிழக்கு மாகாணத்தின் ஏனைய பகுதிகளிலும் பார்க்க வேறுபட்டதல்ல.

இச்சூழ்நிலையில் அம்பாறை மாவட்டத்தில் பெப்ரவரியில் நடத்தவிருக்கும் உள்ளூராட்சி மன்றத்தேர்தல்களை வடக்கு-கிழக்கு மாகாணத்தின் ஏனைய பகுதிகளில் அக்டோபர் மாதத்தில் நடத்தப்படவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களுடன் ஒத்திப் போடுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கோருகின்றோம். இதற்கேற்ப தாங்கள் முடிவு எடுங்கள் இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் தேர்தல் ஆணையாளர் நாயகத்தைக் கோரியுள்ளார். (25)

## மக்கள் சந்திப்பு

வவுனியா மாவட்ட அரசியல் துறையினரால் கிராம மக்களிடையே சமகால அரசியல் கருத்துரை வழங்கப்பட்டது. கனகராயன் குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வவுனியா வடக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் திலீப் தலைமையில் இது அண்மையில் நடைபெற்றது. சிறப்புரையினை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் வழங்கினார். (05)



## சமூகக்கல்வி பொது அறிவுப் போட்டி; மாகாண மட்டத்தில் இரண்டாமிடம்

மாகாண மட்டத்தில் நடைபெற்ற சமூகக் கல்விப் பொது அறிவுப் போட்டி 2003இல் தரம் 6இன் பிரிவில் வெட்டுவாய்க்கால் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவன் நா. சுகந்தன் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.இதேபாடசாலையில் 7ஆம் ஆண்டு கல்வி கற்கும் மாணவி வி. கௌசல்யா 5ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டார். (20)

## காப்புறுதிப் பத்திரங்களை நேரில் பெற்றுக்கொள்க

(அலுவலக செய்தியாளர்)

கடந்த வருடம் நவம்பர் மாதம் கிளி. மாவட்ட அரச செயலகத்தில் நடைபெற்ற மோட்டார் போக்கு வரத்துதிணைக்களத்தினரின் நடமாடும் சேவையின்போது பதிவுகள் மேற்கொண்ட மோட்டார் சைக்கிள்களுக்கான காப்புறுதிப் பத்திரம் (இன்சூரன்ஸ்) கிளிநொச்சி மோட்டார். திணைக்கள உதவி ஆணையர் காரியாலயத்திற்கு வந்து சேர்ந்துள்ளது.

பதிவுகளை மேற்கொண்டவர்கள்அலுவலகநேரத்தில் மேற்படி திணைக்களத்திற்கு வருகை தந்து காப்புறுதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளுமாறு கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் வேண்டியுள்ளார்.

(சோ)

## வெகுசன அமைப்புக்களின் போராட்டத்தில்
# போக்குவரத்துச் சபை பேருந்தை சேதமாக்கிய தனியார் பேருந்து சாரதிகளுக்குப் பிணை!

(வடமராட்சி)

ஹர்த்தால் போராட்டத்தின் ...து வடபிராந்திய போக்குவரத் ...ச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்றைத் தாக்கிச் சேதம் விளைவித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மூவரை பிணையில் செல்ல சாவகச்சேரி நீதவான் நேற்று முன்தினம் அனுமதித்துள்ளார்.

கடந்த ஆண்டின் டிசம்பர் மாதம் 11ஆம் திகதியன்று வெகுசன அமைப்புக்களால் குடாநாடு தழுவிய ரீதியில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த ஹர்த்தால் போராட்டத்தின் போதே இப்பே...ு தாக்கப் பட்டிருந்தது. ஏ.9 ...வூடாக உசன் பகுதிக்கு, யாழ். நகரில் இருந்து சென்று கொண்டிருந்த இப்பேருந்து மீசாலைப் பகுதியில் வைத்து தாக்கிச் சேதமாக்கப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பகுதியைச் சேர்ந்தவர்களான மூவர், பொலிசாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தனர். பின்னர் இடம்பெற்ற விசாரணைகளின் போது இவர்கள் தனியார் பேருந் துச் சாரதிகள் எனவும் கண்டு பிடிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதவான் பா. சுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர். இவர்கள் மூவரையும் பத்தாயிரம் ரூபா காசுப் பிணை மற்றும் பத்தாயிரம் ரூபா பெறுமதியான இரு ஆட் பிணைகளில் செல்ல நீதவான் அனுமதியளித்துள்ளார்.

அதேவேளை, சந்தேக நபர்கள் மூவரையும் தினந்தோறும் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்பமிட வேண்டுமெனவும் நீதவான் தமது உத்தரவில் மேலும் தெரிவித்துள்ளார்.

(27)

## புளியங்குளம் பிரதேச தே.எ.பேரவை தெரிவு

புளியங்குளம் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைக் குழுத் தெரிவு வவுனியா வடக்கு பிரதேசப் பொறுப்பாளர் திலீப் தலைமையில் நடைபெற்றது. இதில் செயலாளராக த. கந்தசாமியும், உபசெயலாளராக க.பத்மநாதனும் பொருளாளராக சிவசுப்பிரமணியமும், தொழில் நடவடிக்கைக்காக ஆ.ஆரோக்கியநாதனும், கல்வி நடவடிக்கைக்காக சுபாஜி அலேஸ் ஆகியோர் உட்பட 11 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வு புளியங்குளம் இந்துக்கல்லூரியில் நேற்று முன்தினம் பிப 3.15 மணிக்கு இடம்பெற்றது. இதில் கிராமிய தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## வட்டக்கச்சி மருத்துவமனை சிரமதானப் பணிமூலம் துப்புரவு

வட்டக்கச்சி வைத்தியசாலை வளாகம் சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. வலயப் பொறுப்பாளர் இராம ஜெயம் ஒழுங்கு படுத்தலில் வட்டக்கச்சி 10 வீட்டுத்திட்ட மக்களால் சிரமதானப் பணி வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

பெருமளவு மக்கள் கலந்து கொண்டு காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரையும் சிரமதானம் இடம் பெற்றது. இதில் மாயவனூர் கிராம சேவையாளர் ஜோன் ஜெகநாதன், தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் பொன்னுத்துரை, பிரதேச பெண்கள் மேம்பாட்டுப் பொறுப்பாளர் தமிழ் மலர், வைத்தியசாலை நிர்வாகத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(12)

## கிளி.மாவட்டத்தில் காணி உரிமையாளருக்கு நிரந்தர காணி அனுமதிப்பத்திரம் வழங்கல்



(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்காலிக காணி அனுமதிப்பத்திரங்களை உடையகாணி உரிமையாளர்களுக்கு நிரந்தரக்காணி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் கடந்த 29ஆம் திகதியன்று கிளிநொச்சி உதயநகர் மேற்கு கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில்வைத்து கரைச்சி பிரதேச செயலக காணி உத்தியோகஸ்தர் செ.ஸ்ரீரங்கநாதன் தலைமையில் உதயநகர் மேற்கு காணி உரிமையாளர்களுக்கு நிரந்தர அனுமதிப்பத்திரம் வழங்குவற்கான நடவடிக்கைகள் மெற்கொள்ளப் பெற்றது.

கரைச்சி பிரதேச செயலர் பொன்நித்தியானந்தம், உதயநகர் மேற்குகிராம சேவை அலுவலர் சிவஞானசுந்தரம்,கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பாபு ஆகியோர் மேற்படி நடவடிக்கையின் போது சமுகமளித்திருந்தனர்.

அன்றையதினம் நிரந்தர அனுமதிப்பத்திரப் பதிவுகளை மேற்கொள்ளத்தவறியவர்களுக்கு பிறிதொரு தினத்தில் பதிவு நடவடிக்கைகள் மேற கொள்ளப்படுமென கரைச்சிப் பிரதேச செயலக காணி உத்தியோகஸ்தர் தெரிவித்துள்ளார். (சோ)

## துணுக்காய் கோட்டத்தின் தே.எ.பேரவை சங்கம நிகழ்வு

துணுக்காய் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு பாண்டியன்குளம் துணுக்காய்ப் பிரதேச அபிவிருத்திப் புனர்வாழ்வுக்கழக மண்டபத்தில் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ச. அமிர்தலிங்கம் தலைமையில் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெற்றது.

இதில் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர்களின் முன் மொழிவுகள் இடம்பெற்றன. கருத்துரையை முல்லை. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் நவா நிகழ்த்தினார். சிறப்புரையில் முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன் சமகால அரசியல் அபிவிருத்திகள் பேரவையின் கட்டமைப்புக்கள், எதிர்கொள்ளும் வேலைத் திட்டங்கள் சம்பந்தமான கருத்துக்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் முல்லை மாவட்ட பெண்கள் மேம்பாட்டுப் பொறுப்பாளர் செல்வி அன்பரசி, துணுக்காய்ப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் த. தர்மேந்திரா, மல்லாவி மருத்துவமனையின் வைத்தியர் ஏகாம்பரமூர்த்தி, தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், பெண்கள் மேம்பாட்டுக் குழுவினர், ஊரக தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டு இச்சங்கம் நிகழ்வைச் சிறப்பித்தனர். நன்றியுரையினை பெண்கள் மேம்பாட்டுக் குழுத்தலைவி நிகழ்த்தினார்.

(24)

## தேசிய பாடசாலை அதிபர்களின் தகைமைகள் மீண்டும் பரிசீலனைக்கு
### போலிச்சான்றிதழ் சமர்ப்பித்ததன் எதிரொலி

(கொழும்பு)

தேசிய பாடசாலை அதிபர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகள் ஆகியோரின் கல்வித் தகைமைகள் மீண்டும் பரிசீலனைக்கு உட்படுத்தப்படவுள்ளன. இதற்கான ஆலோசனையை கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு அமைச்சின் செயலாளருக்கு விடுத்துள்ளார்.அண்மையில் கல்விஅமைச்சரின் கையொப்பத்துடன் கூடிய போலிச் சான்றிதழ் ஒன்று அதிபர் நியமனத்துக்காக சமர்ப்பிக்கப்பட்ட தன் எதிரொலியாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. (32)

## அரசு இலக்கற்ற பாதையில் செல்வதால் சு.க-ஜே.வி.பி. கூட்டில் இணைகிறோம்
### ம.ஐ.மு.தினேஷ்குணவர்த்தன தெரிவிப்பு

அரசு இன்று இலக்கற்ற பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பி.யும் ஆரம்பித்த இக்கூட்டணியில் தானும், தனது கட்சியும் இணைந்து கொள்வதாக மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வியாழக்கிழமை நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

### அவசர கலந்துரையாடல்

கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தில் பணிபுரியும் சகல பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும், உதவிக் கல்விப் பணிப்பாளர்களையும், சேவைக்கால ஆலோசகர்களையும நாளை திங்கட்கிழமை வலயக் கல்வி அலுவலகத்திற்கு தவறாது சமுகம் தருமாறு கிளிநொச்சி வலயக கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# சொந்த பிரதேசத்தில் கட்டாய மருத்துவசேவை நிபந்தனையில் மாணவரை இணைக்கவேண்டும்

### சுகாதார அமைச்சுக்கு அதிகாரிகள் நிர்ப்பந்தம்

**வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்தும் வைத்தியர் பற்றாக் குறை நிலவி வருகின்றது. எனவே மருத்துவ பீடங்களுக்குத் தெரிவு செய்யப்படுவோர் எந்த மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யபட்டாரோ அந்த மாவட்டத்தில் குறிப்பிட்ட காலம் சேவை புரிய வேண்டும் என்று நிபந்தனை விதிக்கவேண்டும் என சுகாதாரத்துறை சார்ந்த நிர்வாக அதிகாரிகள் சுகாதார அமைச்சரிடம் கூறியுள்ளார்கள்.**

வடக்கு-கிழக்கில் தொடர்ந்தும் வைத்தியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது. தென்னிலங்கையிலிருந்து பெரும்பான்மையான வைத்தியர்கள் வடக்கு-கிழக்கில் கடமையாற்ற தயக்கம் காட்டி வருகின்றார்கள். அதேவேளை வடக்கு கிழக்கிலிருந்து மாவட்டக் கோட்டா முறையின் கீழ் மருத்துவ பீடங்களுக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் பாடநெறி பூர்த்தி செய்த பின்னர் கொழும்பு மற்றும் வடக்கு - கிழக்கிற்கு வெளியே கடமையாற்ற விரும்புகின்றார்கள். அதனால் தெரிவு செய்யப்படும் மாவட்டத்திலேயே அவர்கள் மனிதாபிமான முறையில் கடமை புரியநிபந்தனை விதிக்கப்பட வேண்டும் என்று கூறப்படுகின்றது.

வைத்தியர்களை வடக்கு-கிழக்கிற்கு கட்டாயப்படுத்தி அனுப்ப முற்படும்போது தொழிற் சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாக அச்சுறுத்தும் நிலை இருப்பதால் சுகாதார அமைச்சும் தயக்கம் காட்டிவருகின்றது.

## சங்கரியின் மனுவிற்கு பெப்ரவரி—11ல் தீர்ப்பு

தம்மைக் கலந்தாலோசிக்காமல் கூட்டங்களை நடத்தியதாக குற்றம் சுமத்தி தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் இரா.சம்பந்தன், உப தலைவர் ஜோசப்பரராசசிங்கம் ஆகியோருக்கெதிராக வீ.ஆனந்தசங்கரி தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் 11ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இம்மனு மீதான விசாரணையின் போது நீதிபதி மேற்படி கூட்டங்களை கலந்தாலோசித்து நடத்துவதற்கு விதித்த இடைக்கால தடையுத்தரவை வரும் 11ஆம் திகதி வரை நீடித்ததுடன் அதன் மீதான தீர்ப்பையும் அன்று வழங்குவதென அறிவித்துள்ளார்.

# அரசாங்கப் பாடசாலைகள் மூடப்படுவதை ஆட்சேபித்து பல்கலை மாணவர் போராட்டம்!

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளை திட்டமிட்டு மூடிவிட அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு எதிராக அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் ரவீந்திர முதலிகே கூறியுள்ளார்.

நாடு முழுவதும் தற்போது 532 அரசாங்கப் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், இதற்கு எதிர்ப்புக் கூறி எதிர்வரும் 10ஆம் திகதி நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை நடத்தவுமுள்ளது.

பாடசாலைகளைப் பாதுகாக்கும் இயக்கம் ஒன்றையும் ஆசிரியர்கள், பெற்றோர்கள் உதவியுடன் அனைத்து பல்கலைக்கழக ஒன்றியம் ஆரம்பித்துமுள்ளது.

## மீளக் குடியமரத் தடையால் இருபாடசாலைகள் மூடப்பட்டன!

யாழ். மாவட்டத்தில் அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, அரியாலை பூம்புகார் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகிய இரண்டு பாடசாலைகளையும் கல்வித் திணைக் களம் மூடியுள்ளது.

மாணவர்கள் வரவு இன்மை காரணமாகவே இப்பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அரியாலை கிழக்கில் அதியுயர் பாதுகாப்பு வலயப்பிரதேசத்தில் இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீளவும் குடியமர அனுமதிக்கப்படாமையினாலேயே இவ்விரண்டு பாடசாலைகளிலும் மாணவர்கள் வரவின்மை ஏற்பட்டது. இதனை அடுத்தே இரண்டு பாடசாலைகளையும் யாழ். கல்வித்திணைக்களம் மூடியுள்ளது.

# சி.சு.க-ஜே.வி.பி. இடையிலான கூட்டால் எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை

### -சனாதிபதியின் சகோதரி கருத்து

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தம் எவ்வித பிரயோசனமும் இல்லாத ஒன்றென சனாதிபதியின் சகோதரி சுனித்திரா விமர்சித்துள்ளார்.

இக்கூட்டமைப்பு முயற்சியில் இடைத்தரகராக செயற்பட்ட நிமால் சிறிபாலடிசில்வாவை கடுமையாக விமர்சித்துள்ள இவர், திருமணங்களை செய்துவைப்பவர்களே முதலில் அது தொடர்பான பிரச்சினைகளுக்கும் முகம் கொடுபர் என கூறப்படுவது போன்ற நிலைதான் அவருக்கும் ஏற்படுமென சுனித்திரா மேலும் தெரிவித்துள்ளார்.

நிமால்சிறிபாலடிசில்வா,மங்கல சமரவீர, அனுரா ஆகியோர் இக்கூட்டமைப்பிற்கு ஏற்பாடு செய்ததாகவும், இக்கூட்டமைப்பு நிலைக்காதெனவும் தெரிவித்துள்ளார்.

## சமூக செயற்பாடுகளை மேம்படுத்த நடவடிக்கை

கிராம மட்டத்திலான புனர்வாழ்வு புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள மற்றும் ஆற்றலுள்ளவர்களுக்கு பயிற்சியளிக்கவென யாழ் செயலகம் ஆட்களை தெரிவு செய்து அனுப்புமாறு நிறுவனங்களைக் கேட்டுள்ளது.

இதற்கமைய ஒவ்வொரு நிறுவனத்திலிருந்தும் மூன்று பேரைத் தெரிவு செய்து அனுப்புமாறு செயலகம் கேட்டுள்ளது.

சமூக மட்டத்திலான நிறுவனங்களின் ஆற்ற[illegible] மேம்படுத்தலும் மேற்படி பு[illegible]மைப்புப் பணிகளை துரித கதியில் மேற்கொள்ளு[illegible] இதன் நோக்கம் என கூற[illegible]டுகின்றது.

## பயிற்சிநெறி பிற்போடல்!

துணுக்காய் கல்வி வலயத்தில் 06.02.2004 தொடக்கம் 08.02.2004 வரை நடைபெறவிருந்த சாரணர் தலைவர் பயிற்சி, குருளைச் சாரணர் தலைவர் பயிற்சி நெறிகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. மீண்டும் நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என துணுக்காய் வலய பிரதிப் கல்விப்பணிப்பாளர். சு.பரந்தாமன் தெரிவித்துள்ளார்.

## 6ஆம் ஆண்டு நினைவலைகள்



**லெப். கார்த்தீபன்**

பொன்னுச்சாமி விக்னேஸ்வரன் (ரவி)

(கைதடி கிழக்கு, கைதடி)

தாயின் மடியில் 13-05-1975 — தாயக மடியில் 01-02-1998

கல்லறைத் தொட்டியில் துயிலும்
புன்னகை மொழி பேசும் பூவே!
விடுதலையே மூச்சென்று வீரமுடன் நடந்து
விடியலைக் காண அயராது உழைத்தவனே!
நீ சுமந்த கனவு நிச்சயம் ஒரு நாள் நிறைவேறும்

**ஆசைமாமா குடும்பத்தினர்**

முகமாலை வடக்கு,
பளை. (4199)

# ஏ-9 வீதியில் மக்களை அச்சுறுத்தும் படையினரின் நடவடிக்கையை நிறுத்துக

(யாழ்ப்பாணம்)

மக்களை அச்சுறுத்தும் விதத்தில் கண்டிவீதியின் மருங்குகளில் காவல் கடமையில் படையினர் ஈடுபடுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என தென்மராட்சி பொது அமைப்புக்கள் ஒன்றியத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி வீதியில் யாழ் நகரிலிருந்து மிருசுவில் வரையான 30 கிலோ மீற்றர் நீளத்துக்கு சுமார் 75 மீற்றர் நீளத்துக்கு இரு இராணுவத்தினர் வீதம் நாளாந்தம் காவல் கடமையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இவ்வாறு கனரக ஆயுததாரிகளாக படையினர் நிறுத்தப்பட்டிருப்பது மக்களின் இயல்பான போக்குவரவு மற்றும் நடமாட்டங்களுக்கு அச்சுறுத்தலாக அமைகிறது. அத்துடன் இவ்வாறு கடமையில் ஈடுபடும் சிப்பாய்கள் மக்களுடன் வீண்முரண்பாடுகளை உருவாக்கும் விதத்தில் திடீர் சோதனைகள் விசாரணைகளையும் நடத்தி வருவதால் மக்களின் இயல்பான நடமாட்டம் பாதிக்கப்படு கின்றது என்பதை சுட்டிக்காட்டியுள்ளனர். (33)

## அடிப்படை வசதிகளற்று இயங்கும் உதவி அரச அதிபர் பணிமனை !

வடமராட்சிகிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கிவருவதாக அப்பணிமனையின் அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்படிபணிமனை நீண்டகாலமாக தனியார் வீடொன்றிலே இயங்கிவருகின்றது. இதனால் அலுவலகத்திற்குரிய போதிய இடவசதிகள் அமைந்ததாக இவ்வீடு காணப்படவில்லை. இதனால் இப்பணிமனையூடாக மக்களுக்குரிய சேவையை வழங்குவதில் தாம் பெரும் இடர்பாடுகளை அனுபவித்து வருவதாக இவ்அலுவலக அதிகாரிகள் மேலும் சுட்டிக்காட்டுவதுடன்.

இது தொடர்பாக பலதடவை அரசாங்கத்திற்கு சுட்டிக்காட்டியும் இதற்குரிய எந்த நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (33)

## கூட்டங்கள் பிற்போடல்

எதிர்வரும் 3ஆம் திகதி நடைபெற இருந்த கல்வி, சுகாதாரக் குழுக் கூட்டங்கள் 09.02.2004 ஆம் திகதி திங்கட்கிழமை 9.00 மணிக்கு கல்விக்குழுக் கூட்டமும், அதனைத் தொடர்ந்து சுகாதார குழுக்கூட்டமும்,சிறுவர் நலத் திட்டகுழுக் கூட்டமும் நடைபெறும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் அறிவித்துள்ளார்.

## திருமுறிகண்டிப் பகுதியிலுள்ள உணவகங்களில் சோதனை

### -வர்த்தகர்களுடன் கலந்துரையாடல்

ஒட்டுசுட்டான் பிரதேச சுகாதார குழுவினரால் நேற்றுமுன்தினம் திருமுறிகண்டி கடைவீதி உணவகங்கள் திடீர் பரி சோதனைக்குள்ளாக்கப்பட்டது.

சுகாதார அபிவிருத்தி சம்பந்தமாக உணவக உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டதோடு சுகாதார குறைபாடு கண்டறியப்பட்டு கடுமையான எச்சரிக்கையும் வழங்கப்பட்டது.

திருமுறிகண்டி வர்த்தகர்களுடன் பிற்பகல் 3 மணிக்கு சுகாதாரம் மேம்படுத்துவது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றது. (09)



## சிந்தனைக்கு

நாம் துணிந்து போராடுவோம். சத்தியம் எமக்கு சாட்சியாக நிற்கின்றது; வரலாறு எமக்கு வழிகாட்டியாக நிற்கின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 01-02-2004

# பேசிப்பயன் என்ன?

விடுதலைப்புலிகளிடம் இன்று பலரும் கேட்கும் கேள்விகளில் ஒன்று சிறிலங்காவில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படும் பட்சத்தில் புதிய அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவீர்களா? என்பதே ஆகும். இக்கேள்வியினை கடந்த புதன்கிழமை ஐரோப்பிய நாடுகளுக்கு பயணங்களை மேற்கொள்ளும் நிமித்தம் கொழும்பு சென்ற அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களிடம் பி.பி.சி கொழும்புச் செய்தியாளரினால் கேட்கப்பட்டது. விடுதலைப்புலிகள் இயக்கத்திடம் அண்மைக்காலத்தில் இத்தகைய கேள்வி பலதடவைகள் கேட்கப்பட்ட வேளைகளிலும் அதற்குப் பதில்ளித்துள்ள விடுதலைப்புலிகள் இயக்கம் யார் ஆட்சியில் இருப்பினும் விடுதலைப்புலிகள் இயக்கம், அவர்களுடன் இனப் பிரச்சினை தொடர்பான சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்தத் தயாராக உள்ளது என்பதாகவே இருந்தது.

இந்நிலையில் தற்பொழுதும் இக்கேள்வி கேட்கப்பட்டதாயினும்– தென்னிலங்கையில் முன்னைய அரசியற் சூழ்நிலையில் இருந்துசற்று மாறியுள்ள அரசியல் சூழ்நிலையிலேயே இத் தகையதொரு கேள்வி கேட்கப்பட்டுள்ளதெனலாம். அதாவது, சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பி.க்கும் இடையில் ஓர் உடன்பாடு ஏற்பட்டுள்ள நிலையிலும், எப்பொழுதும் ஆட்சிக் கவிழ்ப்பு ஒன்று இடம்பெறலாம் என்ற எதிர்பார்க்கை நிலவுகின்ற சூழ்நிலையிலும், இத்தகைய கேள்வி மீண்டும் கேட்கப்பட்டுள்ளதெனலாம்.

இத்தகைய மாற்றம் கண்டுள்ள சூழ்நிலையில் இக்கேள்விக்குப் பதில் அளித்துள்ள அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் "தமிழ் மக்களின் அபிலாசைகளைப் புரிந்து கொண்டு நிலைப்பாட்டினை ஏற்றுக்கொண்டு மக்கள் ஆணையைப்பெற்று, பேச எக்கட்சி முன்வருகின்றதோ அந்த நேரத்தில் எமது கருத்துக்களை முன்வைக்க முடியும்" எனத் தெரிவித்துள்ளார்.

திரு.சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களது பதிலானது எவருடனும் சமாதானப்பேச்சுவார்த்தைகளை தொடரப்புலிகள் இயக்கம் தயாராகவுள்ளது என்ற நிலைப்பாட்டில் இருந்து புதியதொரு நிலைப்பாட்டிற்குப் புலிகள் இயக்கம் சென்றுள்ளதாக அர்த்தப்படுத்தக் கூடியதொன்றல்ல. தற்போதைய அரசியற்சூழ்நிலை மாற்றத்தினால் சிங்கள அரசியற் கட்சிகளின் குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி கூட்டணியின் நிலைப்பாட்டில் ஏற்படக்கூடிய மாற்றத்தின் காரணமாக தமது நிலைப்பாடு குறித்து புலிகள் வெளிப்படுத்தியுள்ள அபிப்பிராயம் என்றே கொள்ளத்தக்கது.

ஏனெனில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் – ஜே.வி.பியும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இணக்கப்பாடு ஒன்றை எட்டாமலே கூட்டணி அமைத்துள்ளன. இனப்பிரச்சினை தொடர்பான இருகட்சிகளின் நிலைப்பாட்டில் பாரிய வேறுபாடுகள் உள்ளன. இதேவேளை இவ்விருகட்சிகளினதும் நிலைப்பாடு கடந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது ஐ.தே. முன்னணி அரசாங்கம் கடைப்பிடித்த நிலைப்பாட்டில் இருந்தும் தமிழ் மக்களின் அபிலாசைகளில் இருந்தும் வெகுதொலைவிலும் உள்ளன.

இந்நிலையில் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் புரிந்து கொண்டு அதற்குச்சிங்கள மக்களின் அங்கிகாரத்தைப் பெற்றுக்கொள்ளாத கட்சிகள் ஆட்சி அதிகாரத்திற்கு வரின்அவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதினால் பயன்ஏதும் ஏற்படப் போவதில்லை. ஆகையினால் புதிய அரசாங்கம் ஒன்று ஆட்சி அதிகாரத்தை பொறுப்பேற்கும் பட்சத்தில் அவ்வரசாங்கத்தின் அன்றைய நிலைப்பாட்டைப் பொறுத்தே பேச்சுவார்த்தைகுறித்துக் கருத்துக்கூறமுடியும் என்பதே விடுதலைப்புலிகளின் நிலைப்பாடாகும்.

எடுத்துக்காட்டாக சுதந்திரக்கட்சி– ஜே.வி.பி கூட்டணி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் நிலையில், அவற்றின் உடன்பாட்டில் கூறப்பட்டுள்ளதை அடிப்படையாகக் கொண்டே ஜே.வி.பி தனது நிலைப்பாட்டைத் தொடர்ந்தும் மேற்கொள்ளுமானால் அக்கூட்டணி அரசாங்கத்துடன் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்துப் பேசுவதினால் பயன் ஏதும் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

குறிப்பாக அதிகாரப்பரவலாக்கம் தொடர்பான ஜே.வி.பி.யின் நிலைப்பாடு தற்பொழுதும் உள்ளூராட்சி சபைகள் மட்டத்திலேயே உள்ளது. ஆனால் சமஷ்டி வரையிலான அதிகாரப்பரவலாக்கல் இன்றி இனப்பிரச்சினைத் தீர்வில் முன்னேற்றம் காணமுடியாது என்பது ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட தொன்றாகியுள்ளது. இந்நிலையில் புதிய அரசாங்கத்துடன் பேசி என்ன பயன் கிட்டிவிடப்போகின்றது?

இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு என்பது தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கத்தக்கதாகவும் விடுதலைப்புலிகளை ஏகபிரதிநிதிகளாகவும் ஏற்றுக்கொண்டு சர்வதேச மத்தியஸ்தத்துடன் நடத்தப்படுதல் வேண்டும் என்பதே விடுதலைப்புலிகளின் உறுதியான நிலைப்பாடாகும். இதனை ஏற்றுச் சிங்கள மக்களின் அங்கீகாரம் பெற்ற அரசியற்கட்சிகளுடன் பேசுவதினால் மட்டுமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். இது விடுதலைப்புலிகளின் நிபந்தனையல்ல. இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான பொருத்தப்பாடானதாக அமையக் கூடியதான வழிமுறை.

# இந்தியா – சிறிலங்கா பாதுகாப்பு ஒப்பந்த இறுதி நகல் விரைவில் தயாரிக்கப்படும்

**-சிறிலங்கா அரசு நம்பிக்கை**

(கொழும்பு)

இந்தியா - சிறிலங்கா பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் சம்பந்தமாக சிறிலங்கா அரசு எழுத்து மூலமான விளக்கத்தை இந்தியாவிற்கு அளித்துள்ளது.

சிறிலங்காப் பாதுகாப்பமைச்சின் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

இவ்வொப்பந்தம் சம்பந்தமான இறுதி நகல் விரைவில் தயாரிக்கப்படுமென தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் டில்லியில் அண்மையில் நடைபெற்றமை தெரிந்ததே.

# மரண சான்றிதழுக்கு ரூ.10,000 லஞ்சம்; மரண விசாரணை அதிகாரி கைது !

மரண சான்றிதழ் பெற்றுத்தருவதாகக் கூறி பெண் ஒருவரிடம் லஞ்சம் பெற முயன்ற யாழ்ப்பாண மரணவிசாரணை அதிகாரி பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றச் சம்பவமொன்றில் யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மிருசுவில் கெற்பேலியைச் சேர்ந்த நாகராஜா நகுலேஸ்வரன் சுகயீனத்தால் இறந்துள்ளார். இவரின் மரண சான்றிதழைப் பெறுவதற்காக இவரது மனைவி மரண விசாரணை அதிகாரியிடம் சென்றபோது சான்றிதழ் பெறவேண்டுமெனில் ரூபா 10 ஆயிரம் தர வேண்டும் என்று மரண விசாரணை அதிகாரி கோரியுள்ளார்.

இலஞ்சம் கொடுக்க மறுத்த பெண்மணி, யாழ். பொலிசாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து லஞ்சம்பெற முயற்சித்ததாகக் கூறப்படும் மரண விசாரணை அதிகாரி பொலிசாரினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

# நூறு நாட்களுக்குள் அரசு அமைப்போம் தெளிவான கொள்கையுடன் பேசுவோம்

**–சு.க. பாராளுமன்ற உறுப்பினர் கூறுகின்றார்**

(கொழும்பு)

எமது கூட்டு முன்னணி ஆட்சியமைத்ததும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண விடுதலைப்புலிகளுடன் வெளிப்படையான தெளிவான கொள்கைகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவோம் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சமாதானம் என்று கூறிக்கொண்டு அரசாங்கம் பயங்கர யுத்தமொன்றிற்கு புலிகளை தயார்ப்படுத்தியுள்ளது.

இன்னும் 100 நாட்களுக்குள் புதிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண் டும். ரணிலின் அரசாங்கத்தை வீட்டிற்கு அனுப்புவதற்கே நாம் கூட்டணி அமைத்துள்ளோம்.

எமது கூட்டணி அமைக்கப்பட்டுள்ளதால் வெளிநாட்டு முதலீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று புலம்புகின்றனர். ஆனால் அரசாங்கத்தின் கபடத்தனமான வேலைகளினாலேயே முதலீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. என சு.க-ஜே.வி.பி கூட்டு முன்னியினை முதலாவது பொதுக கூட்டத்திலேயே மங்கள சமரவீர கூறியுள்ளார்.

# திடீர் பொதுத் தேர்தலால் ரூ.65 கோடி மேலதிக செலவு!

இந்த வருடம் நடைபெறவிருக்கும் மாகாணசபைத் தேர்தலுக்கு புறம்பாக திடீர் பொதுத் தேர்தல் ஒன்றும் நடைபெறுமாயின் அதற்காக 65 கோடி ரூபா மேலதிகமாக, செலவாகும் என தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் இருதேர்தல்களையும் ஒன்றாக நடத்த முடியுமாயின் அதனால் சுமார் 15 கோடி ரூபா மிகுதியாகக் கிடைக்கும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# யு.என்.டி.பி. நிறுவனத்தால் கடற்றொழிலாளருக்கு உபகரணங்கள்

முல்லை.மாவட்ட கடற்றொழில் நீரியல்வள அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக யு.என்.டி.பி. நிறுவனத்தில் கடற்றொழிலை மேம்படுத்தும் நோக்குடன் 2003ஆம் ஆண்டு முல்லைத்தீவில் ஒருதொகுதி கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதில் கண்ணாடி நூலிழை வள்ளங்கள் 09, வெளியிணை இயந்திரங்கள் -68, மீன்பிடி உபகரணங்கள்-08தொகுதி, இவையனைத்தும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் மோட்டார் சைக்கிள்-04, பாரஊர்தி-01, கணினி-02, ரோணியோ மெசின்-01, நிழற்படப்பிரதி இயந்திரம்-02, யு.பி.எஸ்-02 என்பன அனைத்தும் யு.என்.டி.பி. நிறுவனத்தால் முல்லைத்தீவில் வழங்கப்பட்டது என முல்லை.மாவட்ட கடற்றொழில் நீரியல்வள அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவித்தார். (20)

**- அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் -**

# ஜஸ்டின் ஹெனின் சம்பியனானார்

அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் பெண்கள் ஒற்றையர் போட்டியில் ஜஸ்டின் ஹெனின் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் மெல்போன் நகரில் நடைபெற்றுவரும் போட்டிகளில் மகளிர் ஒற்றையர் ஆட்டத்தில் முதல் நிலை வீராங்கனையான ஜஸ்டின் ஹெனின் கிம் கிளிஸ்டேலை 6:3, 4:6, 6:3 என்ற செட்கணக்கில் தோற்கடித்துச் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

இதேபோல் பெண்கள் இரட்டையர் பிரிவில் ஸ்பெயினின் றியானோ பாஸ்கல் ஆஜென்டினாவின் கார்லஸ் ஜோடி ரஷ்யாவின் ஹுசரற்றோவா, கலூலோஸ்வா ஜோடியை 6:4 6:3என்னும் நேர் செட்களில் வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

ஆடவர் பிரிவில் விம்பிள்டன் சாம்பியனான சுவிஸ்லாந்தைச் சேர்ந்த ரொபட் பெரரோவை 6:3, 6:1, 6:4 என்னும் செட் கணக்கில் வீழ்த்தி இறுதிச்சுற்றுக்குத் தெரிவானார்.

## பொண்டிங் விளையாடமாட்டார்

இன்று பேர்த்தில் நடைபெறும் வி.பி கிண்ணத்துக்கான அவுஸ்திரேலியா பங்கு பற்றும் கடைசி லீக் ஆட்டத்தில் அணித்தலைவர் றிக்கி பொண்டிங் கலந்து கொள்ளமாட்டார். அடம் கில்கிறிஸ்ட் அணியை வழிநடத்துவார். முன்னதாக இத்தொடரின் போது மத்தியூ ஹெய்டன் கில்கிறிஸ்ட் ஆகியோர் ஓய்வில் இருந்தனர். அதுபோல றிக்கி பொண்டிங்குக்கும் ஓய்வு வழங்கப்படவேண்டும் என ஆஸி கிரிக்கெட் சபை எண்ணியதால் அவருக்கு இப்போட்டியிலிருந்து ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

இவரின் இடத்துக்கு சைமன் கட்டிக் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

இத்தொடரின் இறுதிப்போட்டியில் பொண்டிங் பங்கு பற்றுவார். இன்றைய போட்டி அவுஸ்திரேலிய - இந்திய அணிகளுக்கிடையே நடைபெறுகின்றது.

### ஹீத் ஸ்ரீக்கின் அவா

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் வி.பி. கிண்ண ஒருநாள் போட்டித் தொடர் ஒன்றிலாவது தமது அணி வெல்ல வேண்டும் என சிம்பாவே அணித்தலைவர் கூறியிருக்கிறார். தலைசிறந்த இரு அணிகளுடன் மோதி 1 ஓட்டங்கள்,3ஓட்டங்கள் என்ற குறுகிய வித்தியாசத்தில் அவ்வணி தோல்வியைச் சந்தித்தது. இவ்வணி வரும் 3ம் திகதி இந்திய அணியுடன் கடைசி லீக் போட்டியில் விளையாடும்.



# தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்கிறோம்; இனியும் இவ்வாறான நிலை தொடரக்கூடாது

## -யாழ்.இல் சட்டத்தரணி சிறிறல் லக்திலக

(வடமராட்சி)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உணர்வுகளை நாங்கள் தற்போது புரிந்து கொள்கின்றோம். இனிவரும் காலங்களில் இவ்வாறானதோர் நிலை தொடரக்கூடாது என்றார் அரசியல் விவகார நல்லிணக்க அமைச்சின் பிரதம ஆலோசகர் சட்டத்தரணி சிறிறல் லக்திலக.

பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற உரையாடல் நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்கு அவர் நேற்று யாழ்.வருகை தந்திருந்தார். யாழ். நாவலர் கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்ற இவ் உரையாடலில் குடாநாட்டைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் புத்திஜீவிகளும் கலந்து கொண்டனர். அங்கு மேலும் உரையாற்றிய சிறிறல் லக்திலக தெரிவிக்கையில்; "சமஷ்டி பற்றிய விளக்கங்களையும், தெளிவுகளையும் மக்களுக்கு எமது அமைச்சு தொடர்ச்சியாக விளக்கி வருகின்றது. தற்போதைய அரசியற் சூழலில் சமாதான நடவடிக்கைகளிலான முன்னேற்றம் தொடர்பாடல் மற்றும் அரசியல் தேக்க நிலை விடயங்களில் அர்த்தமுள்ள வகையில் மக்களிடையே தெளிவினை ஏற்படுத்த வேண்டும்.

தற்போது அரசு மூன்று முக்கிய விடயங்களை எதிர்கொண்டுள்ளது. போர்நிறுத்த நடைமுறை, அபிவிருத்தி நடவடிக்கைகளிலான சமமின்மை மற்றும் கடந்த காலம் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் என்பவையே அவையாகும்.

ஆயினும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மூன்று முக்கிய அமைச்சுக்களை அண்மையில் பறித்துக் கொண்டதால் இவை அனைத்துமே தற்போது சிக்கலுக்குள்ளாகி விட்டது.

எனினும் தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமை அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

இதேவேளை போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை அரசு மேற்கொள்ள முடியாமைக்கு, உதவி வழங்கும் நாடுகள் உறுதி வழங்கியிருந்த படி நிதி உதவிகளை வழங்கியிராமையே காரணம். எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (27)

# 17 இல. தமிழர்கள் தாயகம் திரும்பினர்

(மன்னார்)

தென்னிந்திய ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானி சதுக்க அகதிமுகாமில் இருந்து இலங்கைத் தமிழர்கள் 17பேர் தாயகம் திரும்பியுள்ளனர்.இவர்களில் 11 ஆண்களும் ஐந்து பெண்களும் ஒரு குழந்தையும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.இவர்கள் வவுனியா இலுப்பங்குளம், மன்னார், பேசாலை, சாவற்காட்டு கிராமத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (மி)

# அக்கராயன் பிரதேசத்தில் குற்றத்தடுப்புக் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

அக்கராயன் பிரதேச காவல் துறையினரால் கிராம ரீதியாக மக்கள் மத்தியில் குற்றத்தடுப்பு, போக்குவரத்து விதிமுறைகள் குறித்து கருத்துரைகள் வழங்கப் பெற்று வருகின்றது.

கடந்த வியாழனன்று காலை 8.30 மணிக்கு அக்கராயன் காவல் பணிமனைப்பொறுப்பாளர் ப. அருள் தலைமையில் கோணாவில் கிராமத்தில் மக்கள் சந்திப்புக்கள் மேற்கொள்ளப்பெற்றதுடன் விதிமுறை கருத்துரைகளும் வழங்கப் பெற்றது.

இந்நிகழ்வில் அக்கராயன் வட்டச்செயலக பொறுப்பாளர் முடியரசன் கலந்து கொண்டார்.

அன்றைய தினம் 3.00 மணிக்கு அக்கராயன் மக்களுடன் அக்கராயன் ம.வியில் மேற்படி சந்திப்பு இடம்பெற்றது. தொடர்ந்தும் மேற்படி தொடர் சந்திப்புக்கள் கிராமரீதியாக இடம் பெறவுள்ளதென அக்கராயன் காவல்துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (சோ)

# வடக்கு மக்கள் நிலை குறித்து சோமவன்ச–டக்ளஸ் ஆராய்வாம்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியும், ஈ.பி.டி.பி.யும் நேற்று கொழும்பில் சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளன. மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க ஈழமக்கள் சனநாயகக் கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.

நடைமுறை அரசியல், வடக்கில் சனநாயகம், அங்குள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை என்பவை தொடர்பில் புதிதாக அரசாங்கத்தை அமைக்கவுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்பது குறித்து நேற்றைய சந்திப்பில் ஆராயப் பட்டதாக மக்கள் விடுதலை முன்னணியின் செய்திக்குறிப்பு ஒன்று கூறுகிறது. (32)

## தென்மராட்சியில்...

சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்ட முன் ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று நேற்று கோயிலாக்கண்டி மஹாலட்சுமி வித்தியாலயத்தில் இடம்பெற்றிருந்தது. இச்சந்திப்பில் போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழுவினது பிரதிநிதிகள், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினது யாழ். அலுவலக அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, பலாலி இராணுவத்தலைமையின் சார்பில் பிரிகேடியர் ஜி.ர.சந்திரசிறி என்பவரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தார். பிரிகேடியர் ஜி.ர.சந்திரசிறி அங்கு உரையாற்றுகையில், "நுணாவில் முதல் மறவன்புலோ வரையான பகுதிகளில் உள்ள இராணுவ பாதுகாப்பு அரணை அண்டிய சுமார் இரண்டு மைல் நீளப்பகுதியில் மக்களை மீளக்குடியமர அனுமதிப்பது பற்றி தற்போது ஆராயப்பட்டுவருவதாகவும், இது தொடர்பான அறிவித்தல் ஓரிரு தினங்களில் படைத்தலைமையினால் வெளியிடப்படுமெனவும் தெரிவித்தார்.

எனினும் படை அதிகாரியின் கருத்துடன் உடன்பட்டிராத அப்பகுதி மக்கள் தமது உண்ணாவிரதப்போராட்டம் திட்டமிட்டபடி இடம்பெறும் எனவும் தெரிவித்திருந்தனர். அத்துடன் இப்பகுதிகளில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வயல் நிலங்களை விடுவிப்பது தொடர்பாக கடந்த ஆண்டு படைத்தரப்பு உறுதி மொழிகளை வழங்கி பெரும் பிரச்சாரங்களை மேற்கொண்டிருந்த போதும் இறுதியில் அவை கைவிடப்பட்டிருந்தமையினையும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதேவேளை சொந்த இடத்தில் கூட குடியி ருக்க முடியாமல் அல்லற்படும் மக்க ளின் துயர வாழ்க்கை இன்னும் தொடர் கதையாக உள்ளது. இந்நிலையில் நீண்ட காலமாக இடம்பெயர்ந்து பெருமளவு விவசாய நிலங்களை இழந்தும், மாணவர்களின் கல்வி வசதிகளையும் இழந்து நீண்ட காலமாக துன்பப்படும் மறவன புலோ, தனங்கிளப்பு,கைதடி- நாவற்குழி மக்களது போராட்டம் வெற்றி பெற யாழ். பல்கலைக்கழக ஒன்றியம் வாழ்த்தியுள்ளது.

அத்துடன் இப்போராட்டத்திற்கு தமது முழுமையான ஒத்துழைப்பும் வழங்கப்படும் என நேற்று விடுக்கப்பட்டுள்ள ஒன்றியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (27)

## கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கல்வி வலய பிரதி, உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையில் நடைபெற ஏற் பாடாகி உள்ளது.

எனவே சகலரையும் மேற்படி கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கிளி.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் வேண்டியுள்ளார். (சோ)

## சனாதிபதி-பிரதமர்...

பிரதமரோ பாதுகாப்பு அமைச்சு தன்னிடம் இல்லாதவரை அமைதி வழிமுறையில் மேற்கொண்டு முன்னேற்றம் காணமுடியாது என்று பல தீர்வுகளை நாங்கள் ஆலோசித்து வருகின்றோம். ஆனால் தீர்வு எட்டப்படவில்லை என்பது உண்மை. ஆனால் அடுத்த ஓரிரு நாட்களினுள் தீர்வு எட்டப்பட வேண்டும் வெறுமனே பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. ஆனால் நம்பிக்கை இழக்கத் தேவையில்லை என்றும் தித்தவெல கூறியுள்ளார்.

## முல்லை...

நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை முள்ளியவளை பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் சரவணன் ஏற்றிவைத்தார். மங்கல விளக்கினை திரைப்பட உருவாக்கப்பிரிவுப் பொறுப்பாளர் சங்கர், முள்ளியவளை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் வீரசிங்கம் ஆகியோர் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

முல்லை மாவட்ட நுண்கலை கல்லூரிகளின் மாணவர்களது நாட்டியம் பரதநாட்டியம், நாடகம் போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. ஓவிய ஆசிரியர் ராஜன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, தமிழீழ மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி உட்பட போராளிகள், பொதுமக்கள், கலைத்துறை சார்ந்தவர்கள் என பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வின் தொடர்நிகழ்வாக இன்றையதினம் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மண்டபத்தில் ஓவியக்கண்காட்சிகள் சான்றிதழ் வழங்கல், சிறப்புரைகள் மற்றும் கலை நிகழ்வுகள் என்பன நடைபெறும் எனவும் கல்லூரி நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (லோ)

# 'விடுதலைப் புலிகள்' தை ஏடு இன்று வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் தைமாதத்திற்குரிய 113வது குரல் 'விடுதலைப்புலிகள் இயக்கம் தொடர்பில் கருத்துமாற்றம் காணும் சர்வதேச உலகம்' என்ற முகப்புச் செய்தியுடன் இன்று வெளிவருகிறது. 'ஒருகுடையின் கீழ் இனவாதிகள், சமாதானத்துக்குச் சாவுமணி' எனச் சொல்லும் ஆசிரியத் தலையங்கத்துடன் வரும் இவ்வேடு க.வே.பாலகுமாரன் எழுதிய "என்தேவனே, என் சத்துருக்களுக்கு என்னை தப்புவியும்" என்ற கட்டுரையும் 'நம்பிக்கை இழந்த மக்களும் நிலை தடுமாறும் சமாதானமும்', கலாநிதி க.சோமஸ்கந்தன் எழுதிய 'இதுவரை நடந்த பேச்சுக்களும் தோல்விக்கான காரணங்களும்' போன்ற அரசியல் கட்டுரைகளையும் தாங்கி வருகின்றது.

உலகத்தமிழாராய்ச்சி மாநாடு பற்றிய 'நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு!- முப்பது ஆண்டுகளின் பின் ஒரு மீள் பார்வை' என்ற நினைவூட்டல் கட்டுரையுடன் தென் சூடான்,மக்களின் போராட்ட விபரிப்பான 'ஆக்கிரமிப்பிலிருந்து மீண்டு எழுதென் சூடன்', மட்டக்களப்பின் எல்லையோர மீள் குடியேற்ற கிராமமான 'வடமுனை -கல்லிச்சை' மக்களின் உணர்வுகளையும் மற்றும் உலைக்களம், விழுதுகள், போராளிகளின் படைப்புக்களையும் போன்ற வழமையான அம்சங்களையும் தாங்கி இவ்வேடு வெளிவருகின்றது.

# ஈராக்கில் கார்க் குண்டுத்தாக்குதலில் 9பேர் பலி ; 50பேர் படுகாயம்

## மற்றொரு தாக்குதலில் 3 அமெ. படை பலி

ஈராக்கின் திக்ரிட்இற்கு அருகே அமெரிக்க ரோந்துப் படையினர்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் மூன்று அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஈராக்கின் வடநகரமான மொசோலினில் பொலிஸ் நிலையம் ஒன்றின் தடையை மோதி மேற்கொள்ளப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதலில் ஒன்பதுபேர் கொல்லப்பட்டுள்ளனர். ஐம்பது பேர் அளவில் காயமடைந்துள்ளனர்.

இதன்போது பாதிப்பிற்குள்ளானவர்களில் ஈராக்கியப் பொலிசாரும் பொதுமக்களும் அடங்குவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலானது அமெரிக்கத் தலைமைக் கூட்டுப் படைகளையும் அவற்றுடன் இணைந்து வேலை செய்வோரையும் இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஈராக்கிய சனாதிபதி சதாம் ஹுசைன் அமெரிக்கப்படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் இதுவரை முந்நூறு ஈராக்கியப் பொலிசார் கொல்லப்பட்டுள்ளதாக ஈராக்கிய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# தூயவன் அரசறிவியற் கல்லூரி மாணவர் கிளி. மருத்துவமனையில் சிரமதானம்

(அலுவலக செய்தியாளர்)

தூயவன் அரசறிவியற்கல்லூரி மாணவர்களால் சிரமதான அடிப்படையில் மாவட்டவைத்திய சாலை வளாகம் மற்றும் மாவட்ட வைத்தியசாலை கட்டடங்கள், நோயாளர் விடுதிகள் என்பன துப்புரவுப்பணிகள் மேற்கொள்ளப் பெற்றது.

நேற்றுக்காலை 6.30 மணிமுதல் மாலை 6.00 மணிவரை தூயவன் அரசறிவியற் கல்லூரி அதிபர் பார்த்தீபன் தலைமையில் அறுபதிற்கு மேற்பட்ட அரசறிவியற் கல்லூரி மாணவர்களால் மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பெற்று வைத்தியசாலை வளாகத்திலிருந்த குன்று குழிகள் செப்பனிடப் பட்டதுடன் வைத்தியசாலை கட்டடங்களும் சுத்தமாக்கப்பெற்று புதுப் பொலிவுடன் காட்சியளிக்கின்றது.

நேற்றுமாலை 6.30 மணிக்கு மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் வைத்து மாவட்டவைத்திய அதிகாரி சிவானந்தன் தலைமையில் சிரமதானப்பணிகளை மேற்கொண்ட அரசறிவியற் கல்லூரி மாணவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பெற்றது. இந்நிகழ்வில் தமிழீழ மக்கள் தொடர்பகப் பொறுப்பாளர் கந்தம்மான், அரசறிவியற்கல்லூரி அதிபர் பார்த்தீபன், வைத்திய கலாநிதிகள் யூடிரமேஸ்குமார் நந்தகுமார், தவராஜா,ஜீவா மற்றும் அரசறிவியற் கல்லூரி துணைப் பொறுப்பாளர் பாரி மகன் ஆகியோர் கலந்து அரசறிவியற் கல்லூரி மாணவர்களின் சேவையைப் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## சனாதிபதி...

முயன்ற போதும் அதனை பிரதமர் ஏற்றுக்கொள்ளவில்லை.

சனாதிபதி பிரேரித்த இணைந்த சமாதான சபை யோசனையும் பிரதமரால் நிராகரிக்கப் பட்டுள்ளது.பிரதமர் இந்த விடயத்தில் வழமையான அணுகுமுறையைக் கையாளுகின்றார். ஏற்கனவே 2000 ஆம் ஆண்டு சனாதிபதி பிரேரித்த இனப்பிரச்சினை தீர்வுப் பொதியை நிராகரித்ததன் மூலம் பிரதமமந்திரி தவறு இழைத்துள்ளதாகவும் லக்ஷ்மன் கதிர்காமர் சுட்டிக்காட்டியுள்ளார். (32)

## ஜப்பானிய...

மாவட்ட வைத்திய அதிகாரி சிவானந்தன் ஆகியோர் வரவேற்று வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பெற்றுவரும் புனரமைப்புப் பணிகள் மற்றும் வைத்தியசாலை பகுதிகளை நேரில் காண்பித்தனர்.

பிற்பகல் 1.00 மணிக்கு வைத்தியசாலை விடுதியில் வைத்து மேற்படி குழுவினர் வைத்தியசாலை செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# இணைய முடிவு

சிறிலங்கா சுதந்திரக்கட்சி- ஜே.வி.பி.கூட்டுடன் இணைந்து கொள்வதற்கான ஒப்பந்தத்தில் பேரியல் அஸ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி தினேஷ் குணவர்த்தன தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி என்பனகையொப்பமிடவுள்ளன. வரும் 4ஆம் திகதிக்கு முன் அவை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஜே.வி.பி...

திற்கு மேலாக இச்சந்திப்பு இடம் பெற்றது. கூட்டமைப்பின் அலுவலர்களை நியமிப்பது தொடர்பாக இச் சந்திப்பு இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஜே.வி.பி.தலைவர்கள் எவரும் இதில் கலந்து கொள்ளவில்லை.

## மக்கள்...

குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

முதலாவது குழு எதிர்வரும் 4.ஆம்திகதி அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை, இந்த மக்கள் குழுக்களின் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் தேசியகுழு ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. இந்த குழுக்களின் பணிகளைத் தீவிரப் படுத்தவும் சமாதானப்பணிகளைத் தொடரவும் எதிர்வரும் 22ஆம் திகதி கொழும்பில் மாபெரும் கூட்டம் ஒன்றும் பிரதமரின் தலைமையில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.